## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَخُوْنُوا اللّٰهَ
وَالرَّسُوْلَ وَتَخُوْنُوْۤا اَمٰنٰتِكُمْ
وَاَنْتُمْ تَعْلَمُوْنَ

**பொருள்**
நம்பிக்கை கொண்டவர்களே நீங்கள் அல்லாஹ்வுக்கும் (அவனுடைய) தூதருக்கும் நம்பிக்கை துரோகம் செய்யாதீர்கள். மேலும் உங்களை நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களில் நீங்கள் தெரிந்து கொண்டே நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள்.(8:28)


بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 10

இதழ் 35

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரீ கமரீ 1447 - ரபீயுல் ஸானீ 02 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - தபூக் 25 ★ 25 செப்டம்பர் 2025


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முஹம்மது (ஸல்) என்ற பெயர் கம்பீரத்தின் வடிவில் இருந்தது. மேலும் அஹ்மது என்பது அழகின் வடிவில். நமது இயக்கமும் அழகின் வடிவில் அமைந்துள்ளது. எனவே அதனால் அதன் பெயர் அஹ்மதி என்றாகியுள்ளது

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### அஹ்மதிய்யா ஜமாஅத் என்று பெயர் வைக்கப்பட்டதற்கான காரணம்

(ஜமாஅத்திற்கு அஹ்மதி என்று இந்தப் பெயர் வைக்கப்பட்டதால், இது புதிய பெயராக உள்ளது என்று யாரோ ஒருவர் ஆட்சேபனை செய்து வந்ததாக ஒருவர் கூறினார். அப்போது இந்த உரையாடல் நிகழ்ந்தது)

**கூறினார்கள்:** ஹனஃபீ, ஷாஃபீ, என்றெல்லாம் தங்களுக்கு மக்கள் பெயர் வைத்துக் கொண்டுள்ளனர். இவை அனைத்தும் பித்அத் ஆகும். ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு முஹம்மது மற்றும் அஹ்மது என்று இரண்டே பெயர்கள் தான் இருந்தன. எப்படி அல்லாஹ்வின் மகத்தான பெயராக அல்லாஹ் என்பது இருக்கின்றதோ அதே போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்தான பெயர் முஹம்மது (ஸல்) என்பதாகும். அல்லாஹ்விற்கு இன்னும் பல பெயர்கள் இருக்கின்றன. உதாரணமாக, ஹய்யீ, கய்யூம், ரஹ்மான் , ரஹீம் போன்ற பண்புப் பெயர்கள் இருக்கின்றன. ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களுக்கு அஹ்மது என்ற பெயரும் இருக்கின்றது. அதனை ஹஸ்ரத் மஸீஹ் (அலை)

يَأْتِيْ مِنْۢ بَعْدِي اسْمُهٗۤ اَحْمَدُ

என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

مِنْۢ بَعْدِي

என்ற சொல்லானது அந்த நபி எனக்குப் பிறகு இடைவெளியின்றி வருவார் என்பதை வெளிப்படுத்துகின்றது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இந்த சொல்லை கூறவில்லை. இன்னும் கூறப்போனால்,

مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ وَالَّذِيْنَ مَعَهٗۤ اَشِدَّآءُ

(அல் ஃபத்ஹ்:30) என்பதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மதீனா வாழ்வின்

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம் ......

## ஆன்மிகத்தின் ஐந்து படித்தரங்களையும் மனிதன் அடைந்து வானவராகி விடுகின்றான் அத்தகைய மனிதன் வல்ல இறைவனின் அனைத்து கட்டளைகளையும் நிறைவேற்றுகின்றார். மேலும் அவர் ஒருபோதும் கவனமற்று இருப்பதில்லை

وَلَقَدْ خَلَقْنَا فَوْقَكُمْ سَبْعَ طَرَآئِقَ
وَمَا كُنَّا عَنِ الْخَلْقِ غَافِلِيْنَ (23:18)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் வசனத்தின் விளக்கவுரையில் ஆன்மிகத்தின் ஏழு படித்தரங்களில் நான்காவது படித்தரத்தைக் குறித்து கூறுகின்றார்கள்:

மனிதனுக்கு நான்காவது படித்தரமாக இந்த விஷயம் கிடைக்கின்றது. அதாவது, அவனுக்கு இறையச்சம் மற்றும் ஆன்மிகத்துடன் ஈர்ப்பு ஏற்பட்டு விடுகின்றது. மேலும் அவன் எல்லா பணிகளையும் அறிவு மற்றும் புரிதலுடன் செய்யத் தொடங்கி விடுகின்றார். ஆனால், அவ்வப்போது ஷைத்தானும் அவரிடம் மேலோங்கி விடுகின்றான். எனினும், தீமையின் தாக்குதல் அவனிடத்தில் மிகக் குறைவாகவே வெற்றி பெறுகின்றது. ஏனெனில், அவரிடத்தில் தீமையை தீமை எனக் கருதக் கூடிய ஆற்றல் உருவாகி விடுகின்றது. இந்த நிலையின் பக்கம் அல்லாஹ் இந்த சொற்களில் சுட்டிக் காட்டியுள்ளான்.

اِنَّ الَّذِيْنَ اتَّقَوْا اِذَا مَسَّهُمْ طٰٓئِفٌ مِّنَ
الشَّيْطٰنِ تَذَكَّرُوْا فَاِذَا هُمْ مُّبْصِرُوْنَ

(அல் அஃராஃப் : 202)

பொருள்: இறையச்சமுடையோருக்கு ஷைத்தானிடமிருந்து ஏதேனும் தீய எண்ணம் ஏற்படும்பொழுது, அவர்கள் எச்சரிக்கை அடைகின்றனர். மேலும் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டவர்களாய் விழிப்படைகின்றனர். (அவர்கள் நேர்வழி அடைந்து விடுவார்கள்)

இந்த வசனத்திலிருந்து இந்த விஷயம் வெளிப்படுகின்றது. அதாவது, அவ்வப்போது, அந்த மக்களை ஷைத்தான் தன் பக்கம் ஈர்க்கின்றான். ஆனால் அவர்கள் உடனடியாக எச்சரிக்கையடைந்து விடுகின்றனர். மேலும் அல்லாஹ்வை தங்களது உதவிக்காக அவர்கள் அழைக்கின்றனர். மேலும், ஷைத்தானிய தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு அடைந்து

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம் ......

## நபிமொழி

### பணியாளர்களுடன் அழகிய நடத்தை

ஹஸ்ரத் இமாம் அபூ ஹனீஃபா (ரஹி) அவர்கள் அதா அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: இந்த சம்பவத்தை ஏராளமான ஸஹாபிகளிடமிருந்து அதா அவர்கள் செவிமடுத்திருக்கின்றார்கள். அதாவது, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்களின் ஓர் அடிமைப் பெண் இருந்தார். அவள் அன்னாருடைய ஆடுகளை மேய்த்து வந்தார். அப்துல்லாஹ் பின் ரவாஹா அவருக்கு ஓர் ஆட்டினை குறிப்பாக கவனத்தில் கொள்ளுமாறு வழிகாட்டல் வழங்கினார்கள். எனவே அந்த ஆடு நன்றாக பெருத்து விட்டது. ஒரு நாள் மேய்ப்பாளராகிய அந்தப் பெண் மேலும் சில கால்நடைகளை பராமரிப்பதில் மும்முரமாக இருந்தார். அப்போது ஒரு நரி வந்து அந்த ஆட்டினை கடித்து துண்டாக்கி விட்டது. அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்கள் அந்த ஆட்டினை காணாதபோது, அது தொடர்பாக விசாரித்தார்கள். அந்தப் பெண்மணி அனைத்து சம்பவங்களையும் எடுத்துரைத்தார். அப்போது, அன்னார் அந்தப் பெண்ணின் கன்னத்தில் அறைந்து விட்டார்கள். பின்னர் தமது இந்த செயலிற்கு வெட்கப்பட்டார்கள். மேலும் இந்த சம்பவத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் எடுத்துரைத்தார்கள்.

அப்போது ஹுஸூர் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கினார்கள். மேலும் கூறினார்கள்:

நீர் ஒரு நம்பிக்கை கொண்ட பெண்ணின் முகத்தில்

இதன் தொடர்ச்சி 9-ம் பக்கம் .....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹுனைன் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு**

ஹுனைன் போருக்காக பெருமானார் (ஸல்) அவர்கள் தம் சிறிய தந்தை வழி சகோதரர் நவ்ஃபல் பின் ஹாரிஸாவிடமும் 3000 ஈட்டிகளைக் கடனாக வாங்கியிருந்தார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்: நான் உன்னுடைய இந்த ஈட்டிகள் எதிரியின் முதுகில் பதிவதைக் காண்கிறேன். பெருமானார் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்றில், எதிரிகள் தோல்வியைத் தழுவி ஓடுவர்; மேலும் பெரிய உயிரிழப்பை எதிர்க் கொள்வர் என்ற முன்னறிவிப்பு இருந்தது. இவ்வாறே இப்னு அபீ ரபீஆடமிருந்தும் சில ஆயுதங்களைக் கடனாக வாங்கினார்கள்

மாநபி (ஸல்) அவர்களின் மேலான நல்லொழுக்கத்தின் வெளிப்பாடு கவனிக்கத்தக்கதாகும். அதாவது பெருமானார் (ஸல்) மக்காவை வெற்றிக் கண்டிருந்தார்கள். இப்பொழுது இது ஒரு வெற்றி கொள்ளப்பட்ட சமுதாயதாக இருந்தது. மேலும், போர் வழிமுறை மற்றும் வழக்கப்படி வெற்றி பெற்றவரே வெற்றி கொள்ளப்பட்ட சமுதாயத்தின் செல்வங்களின் உரிமையாளராக இருக்கின்றார். ஆனால், இப்பொழுது போருக்காக ஆயுதங்களுக்கான தேவை ஏற்பட்டபோது, ஒவ்வோர் ஆயுதமும் கடனாக வாங்கப்பட்டது. நாங்கள் எத்தனை ஆயுதங்களை வாங்குகிறோமோ அவற்றைத் திருப்பித் தந்து விடுவோம் என்று வாக்குறுதி அளித்து வாங்கினார்கள்

மதிப்பிற்குரிய கவாஜா அஹ்மது பட் ஸாஹிப் ஆஃப் கனடா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த நஸீர் அஹ்மது ஸாஹிப் அவர்களின் துணைவியார் ஸயீதா பேகம் ஸாஹிபா ஆகியோரின் நற்குறிப்பும் & ஜனாஸா காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 22 ஆகஸ்ட் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **ஸஹுர் மாதம் 22 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக போர்கள் அல்லது யுத்தங்கள் பற்றி கூறப்பட்டு வந்தது. இது தொடர்பாகவே இன்று ஹுனைன் போர் பற்றியும் கூறுவேன். இந்தப் போர் ஹிஜ்ரீ 8-ம் ஆண்டு ஷவ்வால் மாதத்தில் நடைபெற்றது.

இந்தப் போர் ஹுனைன் என்று ஏன் கூறப்படுகிறது? ஏனெனில், மக்காவுக்கும், தாயிஃபுக்கும் இடையில் இருக்கும் ஓர் ஊரின் பெயர் ஹுனைன் ஆகும். அது மக்காவிலிருந்து ஏறத்தாழ 26 கி.மீ தொலைவில் உள்ளது. இந்தப் போர் இந்த இடத்தில் தான் நடந்தது. எனவே இது ஹுனைன் போர் என்று கூறப்படுகிறது. இந்தப் போரில் கலந்து கொண்டிருந்த பெரிய கோத்திரம் ஹவாஸின் கோத்திரம் ஆகும். எனவே இது ஹவாஸின் போர் என்றும் கூறப்படுகிறது. சிலர் இதை அவ்தாஸ் போர் என்றும் கூறியுள்ளார்கள்.ஏனெனில், எதிரிப் படையின் ஒரு பகுதி ஹுனைனிலிருந்து ஓடிச் சென்று அவ்தாஸ் எனப்படும் ஊருக்குள் சென்று விட்டது. முஸ்லிம்கள் அங்கு சென்றடைந்து எதிரியைத் தோற்கடித்தார்கள். எனவே சிலர் இந்தப் பெயரை வழங்கியுள்ளார்கள். ஆனால், பெரும்பாலான எழுத்தாளர்கள் அவ்தாஸ் போர் பற்றி தனியாகக் கூறியுள்ளார்கள்.

ஹுனைன் போர் பற்றிக் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

أَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيمِ
لَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ فِيْ مَوَاطِنَ كَثِيْرَةٍ ۙ
وَّيَوْمَ حُنَيْنٍ ۙ إِذْ أَعْجَبَتْكُمْ كَثْرَتُكُمْ
فَلَمْ تُغْنِ عَنْكُمْ شَيْئًا
وَّضَاقَتْ عَلَيْكُمُ الْأَرْضُ بِمَا رَحُبَتْ ثُمَّ
وَلَّيْتُمْ مُّدْبِرِيْنَ ثُمَّ أَنْزَلَ اللّٰهُ سَكِيْنَتَهُ
عَلٰى رَسُوْلِهِ وَعَلَى الْمُؤْمِنِيْنَ
وَأَنْزَلَ جُنُوْدًا لَّمْ تَرَوْهَا وَعَذَّبَ الَّذِيْنَ كَفَرُوْا ۭ
وَذٰلِكَ جَزَآءُ الْكٰفِرِيْنَ ثُمَّ يَتُوْبُ اللّٰهُ مِنْ بَعْدِ ذٰلِكَ
عَلٰى مَنْ يَّشَآءُ ۭ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ

பொருள்: நிச்சயமாக, அல்லாஹ் உங்களுக்குப் பல மைதானங்களில் உதவி புரிந்துள்ளான். குறிப்பாக, ஹுனைன் போர் அன்று. அப்போது உங்களின் பெரும்பான்மை உங்களைப் பெருமை கொள்ள வைத்து விட்டது. மேலும், அது உங்களுக்கு எவ்வகையிலும் உதவ முடியவில்லை. மேலும், பூமி விரிவானதாக இருக்கும். அது உங்களுக்குக் குறுகியிருந்தது. பின்னர் நீங்கள் புறமுதுகு காட்டித் திரும்பி விட்டீர்கள்.

பின்னர் அல்லாஹ் தன் தூதருக்கும், நம்பிக்கை கொண்டவர்களுக்கும் தனது அமைதியினை இறக்கினான். மேலும் நீங்கள் காண முடியாத படைகளை இறக்கினான். அது நிராகரித்தவர்களுக்குத் தண்டனை அளித்தது. மேலும், நிராகரிப்பவர்களுக்கு இத்தகைய கூலியே கிடைக்கிறது.

அதற்குப் பிறகும் அல்லாஹ், தான் நாடியவரின் தவ்பாவை ஏற்றுக் கொண்டவாறு அவர் பக்கம் திரும்புவான். மேலும் அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன் மேலும் கருணை காட்டுபவனும் ஆவான்.(அத்தவ்பா: 25 - 27)

இது நடந்ததற்கான காரணம் என்னவென்றால், மக்கா வெற்றிக் கொள்ளப்பட்டதும், அப்பொழுது வரை அரேபியாவின் பெரிய, பெரிய கோத்திரங்கள் ஒன்று இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தன அல்லது மாநபி (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுதலின் கீழ் வந்து விட்டன. ஆனால், மக்காவுக்கு அருகிலேயே வாழ்ந்து வந்த ஹவாஸின் கோத்திரம் மற்றும் பனூ ஃசகீஃப் பெரிதும் கிளர்ச்சி செய்யக் கூடிய மற்றும் போர் புரியக் கூடிய கோத்திரங்களாக இருந்தன. அவர்கள் கட்டுப்படுவதற்கு மறுத்தது மட்டுமின்றி, அவர்களுடைய தலைவர்கள் ஒன்று கூடினார்கள். மேலும், முஹம்மது ((ஸல்) அவர்கள்) மக்காவோடு சேர்த்து அரேபியாவின் கோத்திரங்களை தமக்குக் கட்டுப்படுபவர்களாக, கீழ்படிபவர்களாக ஆக்கிக் கொண்டார். இப்பொழுது அவர்கள் நிச்சயமாக நம்மை நோக்கி வருவார்கள். எனவே அவர்கள் நம் பக்கம் வருவதற்கு முன்னர் நாமே அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விடுவதே சிறந்தாக இருக்கும் என்று கூறினார்கள். அவர்களே இவ்வாறு கற்பனை செய்து கொண்டார்கள்.

மேலும், முஹம்மது (ஸல்) (அவர்கள்)இது வரை போரிடத் தெரியாதவர்களோடு மோதியிருக்கின்றார்(கள்). நம்முடன் இதுவரை அவர்கள் மோதவில்லை என்றும் கூறினார்கள். பனூ ஹவாஸினுடன் ஃசகீஃப், நஸ்ர் மற்றும் சஷ்ம் ஆகிய கோத்திரங்களின் போர் வீரர்கள் அனைவரும் ஒன்று கூடி விட்டனர். ஸஅது பின் பக்ர் மற்றும் பனூ ஹிலால் ஆகிய கோத்திரங்களிலிருந்து சில மக்கள் ஒன்று கூடினார்கள். உண்மையில், பனூ ஹவாஸின் இதற்கு மிகவும் முன்னதாகவே முஸ்லிம்களோடு போர் செய்வதற்கான ஆயத்தத்தை துவங்கியிருந்தார்கள் என்பது சில அறிவிப்புகளில் இருந்து தெரிய வருகிறது.

ஏனெனில், ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மெது மெதுவாக யூதர்கள் உட்பட மற்ற கோத்திரங்களைத் தமக்குக் கீழாக்கிக் கொண்டே செல்கிறார்கள் என்பதை அவர்கள் பார்த்தார்கள். அப்பொழுது சிலை வணக்கம் முடிவுக்கு வந்து, முஹம்மது (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் சேர்ந்து எல்லார் மீதும் மேலோங்கி விடுவார்களோ என்ற கவலை அவர்களுக்கு ஏற்பட்டது. எனவே அவர்களது வழியைத் தடுத்து நிறுத்த வேண்டியது

அவசியம் என எண்ணினார்கள். எனவே அதற்காக அவர்கள் ஆயத்தம் மேற்கொள்ளத் துவங்கினார்கள். உர்வா பின் மஸ்ஊதின் தலைமையில் ஒரு படைக் குழுவை உர்துவின் நகரமான ஜர்ஷுக்கு, அங்கிருந்து ஆயுதங்கள், போர்த் தளவாடங்கள் போன்றவற்றைக் கொண்டு வருவதற்காக அனுப்பினார்கள்.

பனூ ஹவாஸினின் இந்த ஆயத்தங்கள் பற்றி எப்படித் தெரிய வந்தது என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவைப் வெற்றி கொள்வதற்காக மதீனாவிலிருந்து மக்காவை நோக்கி புறப்பட எண்ணியபோது, பெருமானார் (ஸல்) அவர்கள் முன்னணிப் படையாக சில நபர்களைப் படைக்கு முன்னால் அனுப்பி வைத்து விட்டார்கள்.

அந்த முன்னணிப் படை ஹவாஸின் கோத்திரத்தின் ஒரு மனிதனை சிறைபிடித்து விட்டது. அவன் ஓர் உளவாளியாக இருந்தான். ஹவாஸின் சார்பாக முஸ்லிம்கள் மீது ஒரு கண் வைப்பதற்காக சுற்றிக் கொண்டிருந்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனிடம் கேட்டபோது, நன்றாக விசாரித்தபோது அவன் ஹவாஸின் கோத்திரத்தினர் பற்பல படைகளை ஒன்று திரட்டியுள்ளனர். பனூ ஃசகீஃபையும் தன்னுடன் இணைத்துக் கொண்டனர். பெரிய ஆயுதங்களையும் போர்த் தளவாடங்களையும் கொண்டு வருவதற்காக ஜர்ஷை நோக்கி குழுவை அனுப்பியுள்ளனர் என்று கூறினான்.

ஹவாஸின் கோத்திரத்தார் இந்த ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கையிலேயே, மக்கா எந்த ஒரு குறிப்பான தங்கு தடையுமின்றி எளிமையாக வெற்றி காணப்பட்டது.அதன் காரணமாக ஹவாஸின் கோத்திரத்தினர் தங்களது ஆற்றல் மீதான ஆணவத்தால் நாமே முஹம்மது ((ஸல்) அவர்கள் மற்றும் அவர்களுடைய தோழர்களுடன் போர் புரிய செல்லலாம் என்று தீர்மானித்தனர். நம்மால்தான் முஸ்லிம்களைத் தோற்கடித்து அவர்களை வேரறுக்க முடியும் என்பது அவர்களது கற்பனையாக இருந்தது.

அந்த எல்லாக் கோத்திரங்களும் ஹவாஸின் கோத்திரத்தின் தலைவனான 30 வயது இளைஞன் மாலிக் பின் அவ்ஃபைத் தம்முடைய படைத்தளபதியாகவும், தலைவனாகவும் ஆக்கின. மேலும், 20000 பேர் கொண்ட படை ஆயத்தமாகி ஹுனைனை நோக்கி முன்னேறத் துவங்கியது. ஹவாஸின் கோத்திரத்தின் தலைவன் மாலிக் பின் அவ்ஃப் அந்தப் போருக்கு ஆயத்தம் செய்வதற்காக, அரேபியாவின் வரலாற்றில் அதற்கு முன் யாரும் செய்திருக்காத ஓர் அடியை எடுத்து வைத்தான். அது என்னவென்றால், ஒவ்வொரு கோத்திரத்தின் ஒவ்வொரு நபருக்கும் அவர் போருக்காக வீட்டிலிருந்து தனியாக புறப்படக் கூடாது; மாறாக, தன் மனைவி, மக்கள் எதுவரை என்றால், தன்னுடைய பொருள்கள் கால்நடைகள் ஆகிய அனைத்தையும் உடன் எடுத்துக் கொண்டு புறப்பட வேண்டும் என்று படைத் தளபதி கட்டளையிட்டான்.

அதன் மூலம் அவனுடைய படையின் ஒவ்வொரு போர் வீரரும் உயிரை பணயம் வைத்து வீரமாகப் போர் புரிவார்; மேலும் அவருக்குத் தப்பி ஓட எந்த இடமும் இல்லை என்பது அவரது சிந்தனையில் இருக்கும்; ஏனெனில், அவருடைய மனைவி, மக்கள் பொருள் மற்றும் கால்நடைகள் ஆகிய அனைத்தும் அவருடன் இருக்கும் என்பது அவனது நோக்கமாக இருந்தது.

இந்தப் போரில் ஒரு வயதான தலைவர் துரைத் பின் சம்மஹ் என்பவர் போரில் இருந்து தடுத்தது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் ஹவாஸின் கோத்திரத்துடன் இருந்தார். இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: பனூ சஷ்மில் துரைத் பின் சம்மஹ் என்ற ஒரு நபர் இருந்தார். அவருக்கு 100 வயதுக்கு மேல் இருந்தது. அவர் பார்வையிழந்த முதியவராக இருந்தார். அவரிடம் போர் செய்யும் ஆற்றல் இருக்கவில்லை என்றாலும், அவர் அனுபவசாலியாக இருந்தார். மேலும் போர் திறமைகள் குறித்து நன்கு அறிந்திருந்தார். ஒரு காலத்தில் வீரத்திலும், குதிரை ஓட்டுவதிலும் புகழ் பெற்றிருந்தார். அவர்கள் அவரது அனுபவம் மற்றும திறமை ஆகியவற்றிலிருந்து பயன் பெறும் பொருட்டு அவரையும் உடன் அழைத்துக் கொண்டார்கள்.

மாலிக் பின் அவ்ஃப் மக்களுடன் சேர்ந்து ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை நோக்கி செல்வதாக கருத்தொருமித்ததும், மக்கள் தம்முடைய செல்வங்கள், தம் மனைவிமார்கள் மற்றும் மகன்களை உடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். எதுவரை என்றால் அவர்கள் அவ்தாஸ் எனும் ஊரை அடைந்து, முகாம் அமைத்து விட்டார்கள்.

முதியவரான துரைத் பின் சம்மஹ் கீழே இறங்கி நிலத்தைத் தன்னுடைய கைகளால் தொட்டார். நீங்கள் எந்த ஊரில் இருக்கின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு அவர்கள் அவ்தாஸ் என்று பதில் அளித்தார்கள். அதற்கு, இது குதிரைகள் செல்வதற்கு நல்ல இடமாகும் ; கடுமை என்ற வகையில் எந்தப் பிரச்சனையும் இல்லை ; (குதிரையின்) பாதம் புதைந்து விடும் அளவுக்கு மென்மையாக இல்லை. ஆனால், இந்தக் குழந்தைகள் அழும் சத்தம், ஒட்டகங்கள், கழுதைகள், ஆடு, மாடுகள் ஆகியவற்றின் சத்தம் ஏன் கேட்கிறது? என்றார். அப்பொழுது மக்கள் மாலிக் பின் அவ்ஃபின் கட்டளையின் பேரில் அனைத்துக் குழந்தைகளும், பெண்களும், செல்வங்களும், கால்நடைகளும் உடன் கொண்டு வரப்பட்டுள்ளன என்று பதில் அளித்தார்கள்.

அப்பொழுது , நீ உனது சமுதாயத்தின் தலைவன் ஆவாய்; இன்றைய நாளின் தாக்கம் மீதமுள்ள நாள்கள் மீது இருக்கும்; இந்தக் குழந்தைகள், ஒட்டகங்கள், கழுதைகள், ஆடு மாடுகள் ஆகியவற்றை ஏன் உடன் கொண்டு வந்திருக்கிறாய்? என்று துரைத் மாலிக்கிடம் கேட்டார். அதற்கு, நான் ஒவ்வொரு மனிதனுக்குப் பின்னாலும் அவனுடைய மனைவி மக்களை நிறுத்த விரும்புகிறேன்; அப்போதுதான் அவர்கள் எதிரியுடன் இரக்கமின்றி சண்டை.யிடுவார்கள் என்று அவன் பதில் அளித்தான்.

அதற்கு, இது மிகவும் தவறான கருத்தாகும். அல்லாஹ்வின் மீது ஆணையாக! உனக்கு செம்மறி ஆடுகளை மேய்க்க மட்டும்தான் தெரியும் என்று கூறினார். அதாவது, உனக்குப் போர் பற்றி தெரியவில்லை. உனக்குப் போர் பற்றி எதுவும் தெரியவில்லை என்று துரைத் கூறினார்.

பிறகு, தோற்றுப் போன கூட்டத்தின் எந்தப் பொருளாவது திரும்ப கிடைக்க முடியுமா? கேட்டுக் கொள்! போரில் உங்களுக்குப் பலன் கிடைப்பதற்கு மனிதனின் ஈட்டியும் அவனது வாளும் மட்டுமே உதவும் என்பதே விஷயம்; ஒருவேளை போரின் முடிவு உங்களுக்கு எதிராக அமைந்தது என்றால், நீங்கள் உங்களுடைய மனைவி, மக்கள் மற்றும் செல்வம் ஆகியவற்றை கைநழுவ விட்டு விடுவீர்கள்; மாலிக்கே! நீ ஹவாஸின் கூட்டத்தையும், குதிரைகளையும் ஏன் முன்னால் நிறுத்தவில்லை? செல்வங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளை சமுதாயத்தின் கோட்டைகளுக்கு அனுப்பி விடு!; குதிரைகளின் மீது ஏறி அவர்களுடன் போரிடு; மேலும் காலாட்படை குதிரைகளுக்கு நடுவில் இருக்கும்; உங்களுக்கு வெற்றி கிடைத்தால் இந்த மக்கள், அதாவது பிள்ளைகள், செல்வங்கள் மற்றும் கால்நடைகள் உங்களிடம் வருவர்; ஒருவேளை நீங்கள தோல்வியடைந்து விட்டால், நீங்கள் அவர்களிடம் சென்று விடுங்கள்; இவ்வாறு உங்களுடைய மனைவி, மக்கள் மற்றும் எல்லா கால்நடைகளும் தப்பி விடும் என்று அவர் கூறினார்.

அதற்கு, அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அப்படி செய்ய மாட்டேன்; எனது முடிவை மாற்றவும் மாட்டேன்; நீ கிழவனாகி விட்டாய்; உனக்கு மூளை குழம்பி விட்டது என்று மாலிக் பின் அவ்ஃப் கூறினான். அதற்கு, ஹவாஸின் கோத்திரமே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்தக் கருத்து சரியானது அல்ல; இந்த மனிதன் உங்களுடைய பெண்களை அவமானப்பட வைத்து விடுவான்.; மேலும், இவன் உங்களை எதிரியிடம் ஒப்படைத்து விடு; தான் ஃசகீஃபின் கோட்டைகளுக்குள் சென்று ஒளிந்து கொள்வான்; எனவே நீங்கள் திரும்பிச் சென்று விடுங்கள்; அவனை விட்டு விடுங்கள் என்று துரைத் கூறினார்.

இவ்வாறு அவர் போர் செய்யாமல் இருப்பதற்கு ஆலோசனை வழங்கினார். இதனால் தலைவன் ஆக்கப்பட்டிருந்த மாலிக் தனது வாளை எடுத்தான்; மேலும், ஹவாஸின் கோத்திரத்தினரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீங்கள் எனக்குக் கட்டுப்பட வேண்டும்; இல்லையென்றால், நான் எனது முழு சுமையையும் இந்த வாளின் மீது போட்டு இதை எனது நெஞ்சில் இறக்கி விடுவேன்; அதாவது தற்கொலை செய்து கொள்வேன். என்று கூறினான்.

ஹவாஸின் கோத்திரத்தினர் தங்களுக்குள் கலந்து ஆலோசித்தனர். மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நாம் மாலிக்குக் கட்டுப்படவில்லை என்றால், அவன் தற்கொலை செய்து கொள்வான். ஆனால், அவனோ இளைஞன் ஆவான். (அவனுக்குக் கிட்டத்தட்ட 30 வயது இருந்தது) பிறகு, நாம் துரைதுடன் இருந்து விடுவோம். அவன் கிழவன் ஆவான் அவனுடன் சேர்ந்து போர் புரிய முடியாது; நீங்கள் மாலிக்குடன் கருத்தொருமித்து விடுங்கள் என்று கூறினர்.

ஆக, அவனுடன் சேர்ந்து போர் புரிய முடியாது. நீங்கள் மாலிக்குடன் கருத்தொமித்து விடுங்கள் என்று கூறினர்.

ஆக, இதுவே நடந்தது. மாலிக் துரைதிடம், இது இல்லாமல் வேறு எந்தக் கருத்தும் கூட இருக்கிறதா? என்று கேட்டான். அதற்கு, ஆம்! (உள்ளது) பதுங்குக் குழிகளுக்குள் உங்களுடைய மக்களை ஒளித்து வைத்து விடுங்கள்; அவர்கள் உங்களுக்கு உதவியாளர்களாக இருப்பார்கள்; எதிரி உங்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டால், இவர்கள் அவர்களுக்குப் பின்னால் இருந்து தாக்குதல் தொடுத்து விடுவார்கள்; உங்கள் பின்னால் இருந்து தாக்குதல் தொடுத்து விடுவார்கள்; உங்கள் நண்பர்களுடன் சேர்ந்து உங்களால் மீண்டும் தாக்குதல் தொடுக்க முடியும்; நீங்கள்

தாக்குதல் தொடுத்தால் பிறகு அவர்களில் ஒருவர் கூட பின்வாங்கமாட்டார் என்று துரைத் கூறினார். அப்பொழுது மாலிக் தன் கூட்டாளிகளிடம், நீங்கள் புதர்களிலும் பள்ளத்தாக்குகளின் பக்கமும் சென்று ஒளிந்து கொள்ளுங்கள் என்றும், இஸ்லாமியப் படையைத் தோற்கடிக்கும் பொருட்டு முதல் தாக்குதலையே ஒரேயடியாக செய்து விடுங்கள் என்றும் கூறினான்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு பனூ ஹவாஸினின் ஆயத்தம் பற்றிய செய்தியும் கிடைத்தது. அதன் விபரம் பின்வருமாறு: இது பற்றி முன்னரும் சிறிது கூறப்பட்டது. அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மக்காவில் இந்த நிகழ்வுகள் பற்றிய தகவல் சென்றடைந்தது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹவாஸின் கோத்திரங்களின் படையின் நிலைமைகளை ஆய்வு செய்து வருவதற்காக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ ஹத்ரத் அஸ்லமீ (ரலி) அவர்களை அனுப்பினார்கள்.

ஒன்று, ஆயுதங்கள் சேகரிக்கப்படுகின்றன என்று அந்த ஒற்றன் சிறிது செய்தி தெரிவித்தான் இல்லையா? இப்பொழுது இதற்காக இந்த ஆயத்தம் செய்யப்பட்ட பிறகு, பெருமானார் (ஸல்) அவர்கள் செய்தி அறிந்து வாருங்கள்! என தம் ஆள் ஒருவரை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அப்துல்லாஹ் பின் அபீ ஹத்ரத் அஸ்லமீ (ரலி) அவர்கள் ஆவார்கள். அவர்கள் அந்த ஹவாஸின் மக்களின் படைக்குள் நுழைந்து விட்டார்கள். மேலும், அவர்களுக்கு இடையே சுற்றித் திரிந்து எல்லாவிதமான தகவல்களையும் சேகரித்தார்கள். அவர்கள் ஓரிரு நாட்கள் அவர்களிடம் தங்கியிருந்தார்கள். எதுவரை என்றால், அவர்கள் மாலிக் இவ்வாறு கூறுவதையும் கேட்டார்கள்.

அவன் தன் கூட்டாளிகளின் துணிவை அதிகரிப்பதற்காக இவ்வாறு கூறிக் கொண்டிருந்தான்: முஹம்மது (ஸல்) அவர்கள் இதற்கு முன் போர்த் திறமைகளை அறிந்துள்ள எந்தவொரு சமுதாயத்துடனும் போர் செய்ததில்லை.அவர்கள் போர் பற்றித் தெரியாத சமுதாயங்களின் இளைஞர்களுடன் போர் செய்துள்ளார்கள். எனவே அவர்கள், அவர்கள் மீது ஆதிக்கம் பெற்று விட்டார்கள்.

எனவே விடியும்போது, நீங்கள் உங்களுடைய கால்நடைகள் மற்றும் உங்களுடைய பெண்களின் வரிசைகளை உங்களுக்குப் பின்னால் அமைத்துக் கொள்ளுங்கள்; பிறகு, ஒரேடியாகத் தாக்குதல் தொடுத்து விடுங்கள்; நீங்கள் உங்களுடைய வாள்களின் உறைகளைக் கிழித்து விடுங்கள்; உறைகள் அற்ற 20,000 வாள்களுடன் போரிடுங்கள்; ஓர் ஆண்மகன் தாக்குதல் தொடுப்பது போன்று தாக்குதல் தொடுத்திடுங்கள்; முதலில் தாக்குதல் தொடுப்பவரே வெற்றி பெறுவார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்.

பிறகு, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ ஹத்ரத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அன்னாருக்கு அனைத்தையும் தெரிவித்தார்கள். ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் நிர்பந்தத்திற்கு ஆளாகி எதிர்த்துப் போரிட ஆயத்தங்கள் மேற்கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஹவாஸினுடன் போரிடுவதற்காக மக்காவிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் ஆய்வு செய்தபோது, எதிர்ப்பார்க்கப்படும் போரை பொறுத்த வரை இஸ்லாமிய படையிடம் போர்த் தளவாடங்கள் மிகக் குறைவாக இருந்தன. அந்தக் குறையை முழுமைப்படுவத்துவதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பொழுது வரை இணை வைப்பாளராகவே இருந்து வந்த மக்காவின் செல்வந்தரான தலைவர், ஸஃப்வான் பின் உமையாவிடம் சில ஆயுதங்களைக் கடனாகக் கேட்டார்கள். அவர் பெருமானார் (ஸல்) அவர்களிடம், தாங்கள் என்னுடைய பொருளைக் கடனாகப் பெற்ற விரும்புகிறீரா? அல்லது கைப்பற்றிக் கொள்ள விரும்புகிறீர்களா? என்று கேட்டார்.

அதற்கு, மாநபி (ஸல்) அவர்கள் நாங்கள் இதை கடனாகத்தான் கேட்கிறோம். அவை திருப்பிக் கொடுக்கப்படுவதற்கான உத்தரவாதம் வழங்கப்படுகிறது என்று கூறினார்கள். இதனால் அவர் கொடுக்கத் தயாராகி விட்டார். அவர் 100 கவசங்களைக் கொடுத்தார். அவற்றுடன் தலைக் கவசங்கள் மற்றும் கேடயங்கள் போன்றவையும் இருந்தன. சில அறிவிப்புகளுக்கு ஏற்ப இந்த ஆயுதங்களை இடமாற்றம் செய்வதற்காக அவர் ஒட்டகத்தையும் சேர்த்து கொடுத்தார்.

போருக்குப் பிறகு, ஸஃப்வானின் கவசங்கள் திருப்பிக் கொடுப்பதற்காக சேகரிக்கப்பட்டன. அப்பொழுது அவற்றில் சிறிது கவசங்கள் குறைவாக இருந்தன. கவசங்கள் திருப்பிக் கொடுப்பதற்கான உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்தது. ஆகவே நபிபெருமானார் (ஸல்) அவர்கள் ஸஃப்வானிடம் அவற்றிற்கான விலையை வாங்கிக் கொள்! என்று கூறினார்கள். ஆனால், இப்பொழுது கவசங்கள் கொடுக்கும் போது இருந்த அந்த ஸஃப்வான் இருக்கவில்லை. ஸஃப்வான் ஹுனைன் போரில் உடன் இருந்தார். அவர் அப்பொழுதும் இணை வைப்பாளராகத் தான் இருந்தார்.

ஹுனைன் நிகழ்வுக்குப் பிறகு அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். அதாவது, போரில் கலந்து கொண்டார்தான். ஆனால், இணை வைப்பாளராக இருந்தார். ஆனால், ஹுனைனுக்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கவசங்களுக்கான விலையைக் கொடுப்பதாகக் கூறியதும், அதற்கு ஸஃப்வான்

لَا يَا رَسُوْلَ اللّٰهِ

لِاَنَّ فِيْ قَلْبِي الْيَوْمَ مَالَمْ يَكُنْ يَوْمَئِذٍ

என்று கூறினார்.

பொருள்: இல்லை!. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஏனெனில், இன்று எனது மனதின் நிலை எப்படி இருக்கிறதோ அப்படி அன்று இருக்கவில்லை அவர் வாங்க மறுத்து விட்டார்.

இவ்வாறே பெருமானார் (ஸல்) அவர்கள் தம் சிறிய தந்தையார் வழி சகோதரர் நவ்ஃபல் பின் ஹாரிஸாவிடமும் 3000 ஈட்டிகளைக் கடனாக வாங்கியிருந்தார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்: நான் உன்னுடைய இந்த ஈட்டிகள் எதிரியின் முதுகில் பதிவதைக் காண்கிறேன். பெருமானார் (ஸல்) அவர்களின் இந்தக் கூற்றில், எதிரிகள் தோல்வியைத் தழுவி ஓடுவர்; மேலும் பெரிய உயிரிழப்பை எதிர்க் கொள்வர் என்ற முன்னறிவிப்பு இருந்தது. இவ்வாறே இப்னு அபீ ரபீஆடமிருந்தும் சில ஆயுதங்களைக் கடனாக வாங்கினார்கள்.

மாநபி (ஸல்) அவர்களின் மேலான நல்லொழுக்கத்தின் வெளிப்பாடு கவனிக்கத்தக்கதாகும். அதாவது பெருமானார் (ஸல்) மக்காவை வெற்றிக் கண்டிருந்தார்கள். இப்பொழுது இது ஒரு வெற்றி கொள்ளப்பட்ட சமுதாயதாக இருந்தது. மேலும், போர் வழிமுறை மற்றும் வழக்கப்படி வெற்றி பெற்றவரே வெற்றி கொள்ளப்பட்ட சமுதாயத்தின் செல்வங்களின் உரிமையாளராக இருக்கின்றார். ஆனால், இப்பொழுது போருக்காக ஆயுதங்களுக்கான தேவை ஏற்பட்டபோது, ஒவ்வோர் ஆயுதமும் கடனாக வாங்கப்பட்டது. நாங்கள் எத்தனை ஆயுதங்களை வாங்குகிறோமோ அவற்றைத் திருப்பித் தந்து விடுவோம் என்று வாக்குறுதி அளித்து வாங்கினார்கள்.

இவ்வாறே அபூஜஹ்லின் ஒன்று விட்ட சகோதரரான அப்துல்லாஹ் பின் அபீ ரபீஆவிடமிருந்து நபி பெருமானார் (ஸல்) அவர்கள் 30.40 ஆயிரம் திர்ஹம்கள் கடன் வாங்கினார்கள். இவர் மக்கா வெற்றி அன்று முஸ்லிம் ஆகியிருந்தார் என்று அறிவிப்பில் உள்ளது.

ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, அன்னார் குறைஷியர்களின் மூன்று பேரிடம் கடன் வாங்கினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஃப்வான் பின் உமய்யாவிடம் 50 ஆயிரம் திர்ஹமும், அப்துல்லாஹ் பின் அபீ ரபீஆவிடம் 40 ஆயிரம் திர்ஹமும், ஹுவைதப் பின் அப்தில் உஸ்ஸாவிடமிருந்து 40 ஆயிரம் திர்ஹமும் கடனாக வாங்கினார்கள்.இவை மொத்தம் 1,30,000 திர்ஹம்கள் ஆகின்றன.

சில அறிவிப்புகளின் படி, ரொக்கக் கடனை பெருமானார் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் தருணத்தில், தேவையுடைய ஸஹாபிகளுக்கு உதவி செய்வதற்காக வாங்கினார்கள். அவற்றை அன்னார் அவர்களுக்கு இடையே விநியோகம் செய்தார்கள். ஒவ்வொரு நபருக்கும் ஏறத்தாழ 50 திர்ஹம்கள் கொடுக்கப்பட்டன. ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, பனூ ஜஸீமாவின் கொல்லப்பட்டவர்களின் ஈட்டுத் தொகைக்கான இழப்பீடு போன்றவற்றை செலுத்துவதற்காக இந்தத் தொகை வாங்கப்பட்டது. மாநபி (ஸல்) அவர்கள் பல்வேறு தேவைகளுக்காக இந்தத் தொகையைக் கடனாக வாங்கியிருக்கலாம். அதில் பொருளுதவி மற்றும் இழப்பீட்டுத் தொகைகளை செலுத்தியதும் அடங்கும். அல்லாஹ்வே நன்கறிவான்.**வல்லாஹு அஃலம்.(அல்லாஹ் எல்லாரையும் விட நன்கறிபவன் ஆவான்) இதன் மேலும் விவரங்களை இனி எடுத்துரைப்பேன் இன்ஷாஅல்லாஹ்!**

தொழுகைக்குப் பிறகு நான் இருவருக்கு ஜனாஸா காயிப் தொழுகையும் தொழ வைப்பேன். ஒன்று மதிப்பிற்குரிய காஜா முக்தார் அஹ்மத் ஸாஹிப் பட் அவர்களுடையதாகும். இவர்கள் ஸியால்கோட்டின் காஜா அப்துர் ரஹ்மான் ஸாஹிப் அவர்களின் மகனாவார்கள். இவர்கள் கடந்த நாட்களில் 92வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். وَاِنَّاۤ اِلَيْهِ رَاجِعُوْنَ

ஸியால்கோட்டில் பிறந்தார்கள். சட்டக் கல்வி பயின்றார்கள். பிறகு, விமானப் படைக்கு சென்று விட்டார்கள். அங்கு ரிஸால்பூரில் இவர்கள் விமானப் படைக்கு பயிற்சி எடுத்துக் கொண்டார்கள். 1974-வரை பாகிஸ்தான் விமானத்துறையில் சட்ட அதிகாரியாக மிகச் சிறந்த முறையில் தொண்டாற்றி வந்தார்கள். அந்த ஆண்டே மற்ற அஹ்மதிகளுடன் சேர்ந்து இவர்களும் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். 1974 இல் அஹ்மதியா ஜமாஅத்துக்கு எதிராக குழப்பங்களின் மிகவும் இக்கட்டான காலகட்டத்தில் இவர்கள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வழிகாட்டலின்படி ஜமாஅத்தின் முயற்சிகள் தொடர்பாக பஞ்சாபின் முதலமைச்சர்

ஹனீஃப் ராமோவை சந்திக்கவும் செய்தார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களுடனும் ஹஸ்ரத் சவ்த்ரீ ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் (ரலி) அவர்களுடனும் ஆழமான தொடர்பு இருந்தது. Essence of Islam நூலின் முதல் பாகத்தை தயாரிப்பதில் ஹஸ்ரத் சவ்த்ரீ ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களுக்கு உதவி புரிவதற்கும் இவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. தலைமையக அளவில் இவர்கள் Fazle Umar Foundation இன் Director ஆகவும் பல ஆண்டுகள் ரப்வாவின் தாருல் கஸாவில் காஸியாகவும் தொண்டாற்றி வந்தார்கள்.

கஸாவில் இவர்களுடன் நானும் சில காலம் பணி புரிந்தேன். நல்ல கருத்து கூறும் நபராக இருந்தார்கள். மிகவும் பணிவுள்ள மனிதராக இருந்தார்கள். கிலாஃபத்துடன் இவர்களது தொடர்போ எப்பொழுதும் இருந்து வந்தது. பிற்காலத்திலோ என்னுடனும் நல்ல தொடர்பு இருந்தது. 2002 இல் இவர்கள் கனடாவுக்கு இடம் மாறிச் சென்று விட்டார்கள். அங்கு Regional அமீராக தொண்டாற்றி வந்தார்கள்.

தொழுகைகள் மற்றும் திருக்குர்ஆன் ஓதுதல் ஆகியவற்றைப் பேணி வந்தார்கள். பொருள் தியாகத்தில் அதிக அதிகமாக பங்கு பெறக் கூடிய கலப்பற்றத் தன்மை கொண்ட மாய்த்துக் கொள்ளும் அஹ்மதியாக இருந்தார்கள். இவர்களது வாழ்வு கிலாஃபத்துடன் நன்றியுணர்வு, பணிவு மற்றும் களங்கமற்றத் தன்மை ஆகியவற்றிற்கான உயர் முன்மாதிரியாக இருந்தது. பின்விட்டுச் சென்றவர்களில் மனைவி மட்டுமின்றி ஒரு மகன் மற்றும் இரண்டு மகன்கள் இருக்கின்றார்கள். மகள்வழி மற்றும் மகன்வழிப் பேரன்களும், பேத்திகளும் இருக்கிறார்கள்.

இவர்களின் துணைவியார் அமத்துல் கய்யூம் ஸாஹிபா மர்ஹூம் குலாம் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மகளாவாவர்கள். இந்த குலாம் அஹ்மத் அக்தர் ஸாஹிப் இரயில்வே துறையில் இருந்தார்கள். Director பதவியில் இருந்தார்கள். பெரிய பதவியில் இருந்தார்கள்.

எவ்வாறாயினும், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் இவர்களின் பணி ஓய்வுக்குப் பிறகு, சில காலம் நாஸிர் ஆஃலாகவும் இருந்துள்ளார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் மேடையில் சொற்பொழிவின்போது செக்யூரிட்டி டியூட்டியும் கொடுத்து வந்துள்ளார்கள். எவ்வாறிருப்பினும், தொண்டு செய்யக் கூடிய குடும்பமாக இருந்தது. இந்த காஜா இஃப்திகார் ஸாஹிப் என்பவர் யூ.கே வின் சத்ர் காஸா போர்டான டாக்டர் ஸாஹித் கான் ஸாஹிப் அவர்களின் மாமனார் ஆவார்கள்.

காஜா ஸாஹிப் அவர்களின் மகள் ஆயிஷா கான் எழுதுகிறார்கள்: நான் அவர்களை எப்பொழுதும் கிலாஃபத்துக்குக் கட்டுப்பட்டு நடப்பவராகக் கண்டுள்ளேன். சகோதர, சகோதரிகள் மூவருக்கும் இந்தக் கோணத்திலேயே தர்பிய்யத் வழங்கினார்கள். ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துக்குக் கட்டுப்படுவது தவிர நமது வாழ்வுக்கு வேறு எந்த நோக்கமும் இருக்கக் கூடாது. இவ்வாறு எங்களுக்குக் கூறினார்கள். இவர்கள் 1974 இல் ஏர்ஃபோர்ஸ் வேலை திடீரென்று போய் விட்டதனாலும், பிறகு வக்கீலாக பிரைவேட் ஆக பணிபுரிந்ததில் அவ்வளவு அதிகமாக வெற்றி கிடைக்காத போதிலும், பொறுமையையும், அல்லாஹ்வின் மீதான முழுமையான தவக்குலையும் ஒருபோதும் விடவில்லை.

எந்த மனிதனுக்கு முன்னாலும் கையை ஏந்தவில்லை. தம் தேவைகளை அல்லாஹ்வுக்கு முன்னால் மட்டுமே எடுத்து வைத்து வந்தார்கள்.

மகள் கூறுகிறார்கள்: எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அவர்களை இபாதத் செய்பவராகவே பார்த்துள்ளேன். நன்மைகளின் எல்லா வேலைகளிலும் பங்கு பெறவே கண்டுள்ளேன். சந்தாவை எப்பொழுதும் மாதத்தின் துவக்கத்தில் கொடுத்து விடுவார்கள். பணம் இருந்தால், முன் பணமாக சந்தா செலுத்தி விடுவார்கள்.

தொடர்புகளைப் பேணுவதில் மிகவும் முன்னணி வகித்து வந்தார்கள்.நான் கூறியது போன்று, கிலாஃபத்துடன் நன்றியுணர்வுக்கான தொடர்போ இருக்கத்தான் செய்தது. அசாதாரணமான தொடர்பு இருந்தது. ஜமாஅத் அமைப்புக்கும் மிகவும் அதிகமாகக் கட்டுப்பட்டு வந்தார்கள். இன்னும் கூறுவதாயின், இவர்களின் மற்ற சகோதரர்களும் ஜமாஅத் அமைப்பு மற்றும் கிலாஃபத்துடன் மிகவும் கலப்பற்ற தொடர்பு வைத்துள்ளவர்கள் ஆவார்கள். இவர்களின் தந்தையாரும் கூடத்தான். ஏனெனில், அவர்கள்தான் இவர்களுக்குத் தர்பிய்யத் செய்தார்கள். ஆக, இந்த முழு குடும்பமுமே அல்லாஹ்வின் அருளால் மிகவும் அதிகமாக நன்றியுணர்வுக்கான தொடர்பை வைக்கக் கூடியதாகும்.

நான் கூறியது போன்று, இவர்களின் துணைவியாரும் அக்தர் ஸாஹிப் அவர்களின் மகள் ஆவார்கள். இதுவும் தொண்டு செய்யும் குடும்பம் ஆகும். எவ்வாறிருப்பினும், கணவன் மனைவி ஆகிய இவ்விருவரின் தர்பிய்யத்தின் காரணமாக பிள்ளைகளும் ஜமாஅத்துடன் கலப்பற்ற தொடர்பு கொண்டவர்கள் ஆவார்கள். மேலும் தொண்டாற்றக் கூடியவர்கள் ஆவார்கள். அல்லாஹ் இவர்களின் பிள்ளைகளுக்கு இவர்களின் நன்மைகளைத் தொடர்வதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! மர்ஹூம் அவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக!

இரண்டாவது ஜனாஸா குறிப்பு இந்தியாவின் நஸீர் அஹ்மது ஸாஹிப் அவர்களின் துணைவியார் ஸயிதா பேகம் ஸாஹிபா அவர்களுடையதாகும். இவர்களும் கடந்த நாட்களில் 75வது வயதில் மரணமடைந்துவிட்டார்கள்.

وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் கணவர் மட்டுமின்றி 3 மகள்கள் மற்றும் 4 மகன்கள் இருக்கின்றார்கள். இவர்கள் காதியானின் நாயிப் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் தாஹிர் அஹ்மத் ஸாஹிப் ஜமாஅத் பிரதிநிதியாக இங்கு இங்கிலாந்துக்கு வந்திருந்தார்கள். அங்கு இவர்களின் தாயார் மரணமடைந்து விட்டார்கள்.

எனவே இவர்களால் அன்னாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. இதுவும் தொண்டாற்றும் குடும்பம் ஆகும்.

இவர்களின் சிறிய மகன், தாஹிர் ஸாஹிப் அவர்களின் தம்பி ஷபீர் அஹ்மத் ஸாஹிப் அவர்களும் இயக்கத்தின் முஅல்லிம் ஆவார்கள். இவ்வாறே இவர்களின் மகளும் இயக்கத்தில் முபல்லிஃக் ஜப்பார் ஸாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள். மற்ற இரண்டு மகன்களும் கூட ஜமாஅத்துக்குத் தொண்டு செய்யக் கூடியவர்கள் ஆவார்கள். பெரும் தொண்டாற்றும் குடும்பம் ஆகும். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்குவானாக!

தாஹிர் அஹ்மத் தாரிக் ஸாஹிப் எழுதுகிறார்கள்: கடந்த 25 ஆண்டுகளாக மூச்சுப் பிரச்சனையில் மூழ்கியிருந்தார்கள். மேலும் மிகவும் பொறுமையுடனும், கண்ணியத்துடனும் தமது நோயின் காலத்தைக் கழித்தார்கள். எந்த முறையீடும் செய்யவில்லை. இவர்கள் ஜம்மு காஷ்மீரின் ரஜோரி பகுதியின் சார்கோடோஹ் பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்கள். இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஸஹாபியான ஹஸ்ரத் காஸீ முஹம்மத் அக்பர் ப(ஹ)ட்டீ ஸாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. பிறகு, இவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் பரவியது.

பெரும் மார்க்கப் பற்றுள்ளவராகவும், தொழுகை மற்றும் நோன்பைக் கடைபிடிப்பவராகவும் இருந்தார்கள். கொஞ்சம்தான் படித்திருந்தார்கள். ஆனால், குழந்தைப் பருவத்தில் மாலையில் எங்களுக்குத் திருக்குர்ஆனின் துஆக்கள், ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நஸ்ம்கள், நபிமொழிகள் மற்றும் நபிமார்களின் நிகழ்வுகளை எடுத்துக் கூறுவார்கள். இயல்பில் மென்மை மிக அதிகமாக இருந்தது.அனைவருடனும் நன்றாகப் பழகக் கூடியவராகவும், தம்முடைய அனைத்து உற்றார் உறவினர்களுடனும் அன்பு மற்றும் பரிவு காட்டக் கூடியவராகவும் இருந்தார்கள். கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்புடன் பெரிதும் அன்பு இருந்தது.

சுயமாக சொந்த ஆர்வத்தில் எங்களை வக்ஃப் செய்தார்கள். மேலும், வக்ஃபை நிறைவேற்றுமாறு எப்பொழுதும் எங்களை வலியுறுத்தி வந்தார்கள். திருக்குர்ஆன் கற்றுக் கொள்வதற்காக தினமும் தயார்ப்படுத்தி அனுப்புவார்கள். இவ்வாறே உலகக் கல்வியின் பக்கமும் கவனம் செலுத்தினார்கள். பிள்ளைகள் அனைவரையும் நன்றாகப் படிக்க வைத்தார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி கருணையுடன் நடந்து கொள்வானாக!

(அல் ஃபஸ்ல் இன்டர் நேஷனல், செப்டம்பர் 12, 2015, பக்கம் 2 - 5)

தமிழாக்கம்

முரப்பி
அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * *

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

## இஸ்லாமிய பர்தாவின் முக்கியத்துவமும் அருள்களும்

**(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில்)**

**மதிப்பிற்குரிய டாக்டர் மன்ஸூரா அலாவுத்தீன் ஸாஹிபா (சத்ர் லஜ்னா பாரத்)**

(சொற்பொழிவு-காதியான் ஜல்ஸா 2024)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் எனும் தம் நூலில் இஸ்லாமிய பர்தா தொடர்பான திருக்குர்ஆன் சூரா அந்நூர் 31 முதல் 32 வரையிலான வசனங்களை விவரித்தவாறு கூறுகிறார்கள்:

அல்லாஹ் கூறுகின்றான்:

நீங்கள் உங்களுடைய கண்களை அந்நிய பெண்களை பார்ப்பதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று நீர் நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் கூறுவீராக! மேலும் பாலுணர்வை தூண்டும் பெண்களை உற்றுப் பார்க்கக் கூடாது; அது போன்ற சந்தர்ப்பங்களில் பார்வையை தாழ்த்திக் கொள்ளும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள்; உங்களுடைய மறைக்க வேண்டிய இடங்களை முடிந்த வரை பாதுகாத்துக் கொள்ளுங்கள்; அதே போன்று உங்களது காதுகளை அந்நிய பெண்களின் பாடல்கள் மற்றும் இனிய குரல்களைக் கேட்பதில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். அவர்களின் அழகை வர்ணிக்கும் கதைகளை கேட்காதீர்கள். இது பார்வையும், உள்ளமும் தூயதாக இருப்பதற்குரிய சிறந்த வழிமுறையாகும். அதே போன்று நம்பிக்கை கொண்ட பெண்களிடம் நீர் கூறுவீராக ; அவர்கள் அந்நிய ஆண்களை பார்ப்பதிலிருந்து தமது கண்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் தங்களது காதுகளை பாலுணர்வை தூண்டும் ஆண்களின் குரல்களை கேட்பதில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மறைக்க வேண்டிய தமது இடங்களை மறைத்துக் கொள்ள வேண்டும். மேலும் தங்களுடைய அழகினை வெளிப்படுத்தும் உறுப்புகளை அந்நிய ஆண்களிடமிருந்து மறைத்துக் கொள்ள வேண்டும். மேலும் தங்களின் முந்தானையால் மார்பை மறைத்து தலையை மூட வேண்டும். அதாவது மார்பும், இரு காதுகளும், தலையும் இரு கன்னங்களும் முந்தானையால் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் நடனமாடுபவர்களைப் போன்று தமது கால்களை நிலத்தில் அடித்து அடித்து நடக்கக் கூடாது. இவை யாவற்றையும் பின்பற்றுவது தடுமாற்றங்களில் இருந்து பாதுகாக்கும் வழிமுறைகள் ஆகும்.

(ரூஹானீ கஸாயின், தொகுதி 10, பக்கம் 341, 342)

நான் எந்த வசனங்களை ஓதினேனோ அவற்றிலிருந்து, பர்தா பற்றிய கட்டளையின் துவக்கம் பார்வையை தாழ்த்திக் கொள்வதிலிருந்து ஆரம்பிக்கின்றது என்று தெரிய வருகின்றது. பார்வை தூயதாக இருப்பதே உண்மையான பர்தா ஆகும். இவ்விஷயத்தில் ஆண்கள் முதலில் பார்வையை தாழ்த்த வேண்டும் என்று அல்லாஹ் வலியுறுத்தியுள்ளான். ஆகவே, பார்வையை தாழ்த்திக் கொள்வது என்பது பர்தாவின் முதல் படிக்கட்டு ஆகும். அந்த படிக்கட்டின் மீது ஆணும், பெண்ணும் ஏறிக் கொண்டால் தத்தமது கற்பை பாதுகாக்கும் உத்தரவாதத்தை வழங்க முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் முஸ்லிம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் அவர்கள் தம் பார்வையை தாழ்த்திக் கொள்ள வேண்டும் என்று வழிகாட்டல் வழங்குகிறது. அவர்கள் ஒருவர் மற்றவரை பார்க்காதபோது பாதுகாப்பாக இருப்பார்கள். சிறைவாசிகளைப் போன்று பெண்கள் அடைத்து வைக்கப்பட வேண்டும் என்பது இஸ்லாமிய பர்தாவின் நோக்கமே கிடையாது. (இதைக் குறித்து) திருக்குர்ஆன் கூறும் பொருள் என்னவென்றால், பெண்கள் மறைத்துக் கொள்ள வேண்டும் ; அவர்கள் அந்நிய ஆண்களை பார்க்க வேண்டாம். வாழ்வாதார தேவைக்காக எந்த பெண்களுக்கு வெளியே செல்ல வேண்டியது ஏற்படுகிறதோ அவர்கள் வீடுகளை விட்டு வெளியே செல்வதற்கு தடையொன்றும் கிடையாது. அவர்கள் தாராளமாக செல்லலாம். ஆனால், பார்வையின் பர்தா அவசியமாகும். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 405, காதியான் பதிப்பு 2016-ம் ஆண்டு)

மனிதனுடைய அங்கங்களில் அனைத்தையும் விட அதிக ஈர்ப்பை ஏற்படுத்தக் கூடியது முகம் ஆகும். பெண்கள் தம் அழகை மறைத்துக் கொள்ள வேண்டும் என திருக்குர்ஆன் கட்டளையிட்டுள்ளது. பெண்கள் இயல்பாகவே (தம்மை) அழகுபடுத்துவதன் பக்கம் சாய்ந்திருக்கும்போது முகத்தை திறந்து வைப்பது எப்படி சரி? பர்தாவின் கட்டளை இறங்கிய பிறகு தம் அழகை வெளிப்படுத்த வேண்டாம் என அனைத்து முஸ்லிம் பெண்களும் தம் முகத்தை மறைத்துக் கொண்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: பெண்களின் உடல் முழுவதும் மறைக்கத் தகுந்ததாகும். பர்தாவிலிருந்து முகம் விதிவிலக்காக ஆக்கப்படவில்லை என்பது இதிலிருந்து தெளிவாக தெரிகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

கண்கள் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் சிறிதளவு வரை திறந்து வைக்கலாம். ஆகவேதான், கண்களை தாழ்த்திக் கொள்ளுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. (அல் அஸ்ஹாரூ லி ஸவாத்தில் கிமாரி, பக்கம் 214)

அன்னார் (ரலி) மேலும் கூறுகிறார்கள்: எந்தப் பெண்கள் அந்நிய ஆண்களிடம் பர்தா செய்யாமல் இருக்கிறார்களோ அவர்களுடன் ஷைத்தான் இருக்கின்றான். (மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 1, பக்கம் 69)

கண்ணியத்திற்குரியவர்களே! இஸ்லாமிய பர்தா என்பது அழகை மறைக்கக் கூடிய உடையும், வெட்கம், பரிசுத்தம் ஆகியவற்றை மேற்கொள்வதும் ஆகும். மனிதன் அனைத்து ஒழுக்கங்களிலும் உயரிய தரத்தை நிலை நாட்ட வேண்டும் என்ற போதனையை இஸ்லாம் வழங்கியுள்ளது. வெட்கம் என்பது இஸ்லாத்தின் தனிச் சிறப்பு மிக்க பண்பாகும். ஹதீஸில் வருகிறது: ஒவ்வொரு மார்க்கத்திற்கும் ஒரு சிறப்பு பண்பு இருக்கும். இஸ்லாத்தின் சிறப்பு பண்பு வெட்கம் ஆகும். இஸ்லாம் என்பது இயல்பையொத்த மார்க்கம் ஆகும். அது வெட்கம் எனும் பண்பை ஆண், பெண் இருவருக்கும் கட்டாயமாக்கியுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த பண்பை முழுமையாக வெளிப்படுத்தக் கூடியவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூ ஸயீத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

கற்புகள்ள, தூய சூழலை நிலை நாட்டுவதற்கு ஆண், பெண் இருவரும் ஒருவர் மற்றவரிடம் பர்தாவை பேணுமாறு இஸ்லாம் கட்டளையிடுகிறது. பர்தாவுக்கான கட்டளை ஏன் உள்ளது என்றால், ஆண், பெண் சுதந்திரமான முறையில் சந்திப்பதில் கட்டுப்பாடும், அதன் விளைவால் ஒழுக்க ரீதியாக ஏற்படக் கூடிய தீய முடிவுகளிலிருந்து தப்பிப்பதற்கும் ஆகும். ஆகவே பர்தாவை செயல்முறை படுத்தியதை வெளிப்படுத்தும் விதமாக (உங்களின்) பார்வையை தாழ்த்திக் கொள்ளுங்கள் என்ற கட்டளை ஆண், பெண் இருவருக்கும் எவ்வித பாகுபாடும் இன்றி வழங்கப்பட்டுள்ளது.

கண்ணியத்திற்குரியவர்களே! பர்தாவின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் தொடர்பான இஸ்லாமிய கட்டளைகளை நாம் படித்துப் பார்த்தால் சந்தேகத்திற்கிடமின்றி மற்ற அனைத்து மார்க்கங்களை விடவும் இஸ்லாம் பர்தாவின் அவசியம் குறித்து அழுத்தம் கொடுத்திருப்பதை பார்க்க முடிகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) மற்றும் ஹஸ்ரத் மைமூனா (ரலி) ஆகியோரை இப்னு உம்மு மக்தூம் (ரலி) எனும் பார்வை தெரியாத ஒரு ஸஹாபியிடம் பர்தாவை மேற்கொள்ளுமாறு கட்டளையிட்டபோது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவரோ பார்வையற்றவராயிற்றே! அவரால் எங்களை பார்க்க முடியாது என்று அவர்கள் கூறினர்.

அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் இருவரும் பார்வையற்றவர்களா என்ன? நீங்கள் அவரை பார்க்க முடியாதா என்ன? என்று கேட்டார்கள். (மிஷ்காத், கிதாபுல் அதப்)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஆண்கள் பெண்களிடத்திலும், பெண்கள் ஆண்களிடத்திலும் பர்தா செய்ய வேண்டும் என்று இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது என்றால், அதற்கான நோக்கம் மனிதனுடைய நஃப்ஸ் தடுமாற்றமடைந்து வழுக்கி விழுவதை விட்டும் தப்பித்திருக்க வேண்டும் என்பதாகும். (அல் பத்ர், தொகுதி 3, பக்கம் 34)

வெட்க உணர்வின் காரணமாக

மனிதனுடைய கூற்றிலும், செயலிலும் அழகு உருவாகி விடுகின்றது. ஆகவே படைப்பினங்களின் பார்வையில் வெட்க உணர்வுள்ள மனிதன் ஈர்க்கக் கூடியனாக ஆகி விடுகின்றான். இறைவனுடைய பார்வையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவனாக ஆகிவிடுகின்றான். திருக்குர்ஆன் இதற்கு சான்றாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் மத்யன் (நகர்)-க்கு ஹிஜ்ரத் செய்தபோது, அவர்களை சந்தித்த பெண்கள் தொடர்பாக கூறும்போது, அவர்களுடைய வெட்க உணர்வை எடுத்துக் கூறியுள்ளது. அதாவது, அந்த பெண்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களிடத்தில் தம் தந்தையினுடைய தூதுச் செய்தியை கொண்டு வந்தபோது, அவர்களின் நடவடிக்கைகள் மிகவும் கூச்ச சுபாவம் கொண்டதாகவும், ஒழுக்கமுடையதாகவும் இருந்தது. அல்லாஹ்வுக்கு அவர்களின் இந்த நாணமும், வெட்கமும் எந்த அளவு பிடித்து விட்டது என்றால், திருக்குர்ஆனில் அதை இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளான்:

அவ்விருவருள் ஒருத்தி நாணத்துடன் நடந்து அவரிடத்தில் வந்தாள். (சூரா அல் கஸஸ்: 26)

நாணம் என்பது எவ்வாறான பண்பு என்றால், அதன் காரணமாக மனிதன் பரிசுத்தமான தூய வாழ்வை வாழ்கிறான்; ஆனால் இதற்கு நேரெதிராக எந்த மனிதன் நாணம் எனும் அருளிலிருந்து இழப்பிற்குரியவனாக ஆகிவிடுகின்றானோ அவன் உண்மையாகவே நற்பேறை விட்டு இழப்பிற்குரியவனாக ஆகி விடுகின்றான். அவ்வாறான மனிதனைக் கண்டு இறைவன் அருவருப்பு கொள்கிறான். அவ்வாறான மனிதனிடமிருந்து நன்மையை எதிர்பார்ப்பதும் வீணான ஒன்றாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் ஒன்று உள்ளது. அன்னார் (ஸல்) கூறுகிறார்கள்: உமக்கு நாணம் இல்லையேல் விரும்பியதை செய்து கொள். (ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் அதப்)

வெட்கமற்ற மனிதன் எந்தவோர் விதிகளுக்கும் கட்டுப்பட்டவனாக இருக்க மாட்டான் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது. அவனுடைய வாழ்வு கட்டுப்பாடற்ற ஒட்டகத்தைப் போன்று ஆகிவிடுகிறது. முன்னேற்றமடைந்த காலகட்டம் என்று அழைக்கப்படும் இக்காலத்தில் வெட்கத்தின் தரம் நேர்மாற்றமாக புரியப்பட்டுள்ளது. மேற்கத்திய உலகை குருட்டுத்தனமாக பின்பற்றுவதால் ஏற்படக் கூடிய அபாயகரமான விளைவுகளில் இருந்து தப்பிக்கும் வகையில் இவ்வாறான கால கட்டத்தில் நமது இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் நிரந்தரமான வழிகாட்டல்கள் நமக்கு கிடைத்துக் கொண்டிருப்பது நம்முடைய நற்பேறு ஆகும். இது தொடர்பாகவே ஆண்டு மாநாட்டின் இன்றைய இந்த அமர்வில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் இஸ்லாமிய பர்தாவின் முக்கியத்துவமும் அருள்களும் என்ற தலைப்பில் கருத்துக்களை எடுத்து வைக்குமாறு எனக்கு கட்டளை இடப்பட்டுள்ளது.

கண்ணியத்திற்குரிய சகோதரிகளே! நம் அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அஹ்மதி பெண்களிடத்தில் இஸ்லாமிய பர்தாவை நடைமுறைப்படுத்துவதற்காகமுயற்சி மேற்கொண்டு வருகின்ற அதே நேரத்தில் முஸ்லிம் அல்லாதவர்கள் சார்பாக பர்தாவின் மீது செய்யப்படுகின்ற தாக்குதல்களையும் வெற்றிகரமான முறையில் எதிர்கொண்டு வருகிறார்கள். அன்னாருடைய ஒவ்வோர் அறிவுரையும் நம்முடைய இம்மை மற்றும் மறுமையை சீர் செய்யக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே நம்முடைய கடமை என்னவென்றால், நாம் ஹுஸூர் அவர்களின் இந்த அறிவுரைகளை கவனமாக கேட்பது மட்டுமின்றி நம்மிடத்திலும், நமது சந்ததிகளிடத்திலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதியாக்குவதற்கு எல்லா வகையிலும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்!

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறுகிறார்கள்:

உலகில் உள்ள பொதுமக்கள் மார்க்கத்தை விட்டு விலகிச் செல்வதை தற்காலத்தில் நம்மால் காண முடிகிறது. ஆகவே, அவர்களின் நன்மை, தீமைக்கான தரங்களும் மாறிக் கொண்டே இருக்கின்றன. உதாரணமாக, இக்காலத்தில் சுதந்திரம் மற்றும் ஃபேஷன் என்ற பெயரில் பெண்களும், ஆண்களும் சந்திப்பது பொதுவானதாக ஆகிக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். வெளிப்படையாக வெட்கமற்ற செயல்களை செய்வது முன்னேற்றமடைந்ததற்கான அடையாளமாக பார்க்கப்படுகின்றது. வெட்கம் என்பதே இல்லாமல் போய்விட்டது. இதற்கான தாக்கம் இங்கு வசிக்கின்ற நமது ஆண் பிள்ளைகளிடத்திலும் பெண் பிள்ளைகளிடத்திலும் ஏற்படும் என்பதும் வெளிப்படையில் ஓரளவுக்கு தாக்கமும் ஏற்பட்டிருக்கலாம்.

சில சிறுமிகள் இளமைப் பருவத்தில் காலெடுத்து வைக்கும்போது எனக்கு கடிதம் எழுதுகிறார்கள். அதில், இஸ்லாத்தில் பர்தா ஏன் அவசியம்? நாங்கள் இறுக்கமான ஜீன்ஸ் மற்றும் பிளவுஸ் அணிந்து கொண்டு புர்கா இல்லாமல் அல்லது கோட் அணியாமல் வீடுகளை விட்டு ஏன் வெளியே செல்லக் கூடாது? இங்கு ஐரோப்பாவில் சுதந்திரமான பெண்களைப் போன்று ஏன் உடை அணியக் கூடாது?என்று எழுதுகிறார்கள். நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், நாம் மார்க்கத்தில் நிலைபெற்றிருக்க விரும்பினால் பிறகு மார்க்க போதனைகளின்படியும் அமல் செய்ய வேண்டியது அவசியமாகும். நாங்கள் முஸ்லிம்களாவோம் ; மார்க்கத்தில் நிலை பெற்றிருக்கின்றோம் என்று நாம் அறிவிக்க விரும்பினால், பிறகு இவ்விஷயங்களுக்கு கட்டுப்படுவதும் அவசியமாகும்.

அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களின் விஷயங்கள் மற்றும் கட்டளைகளின்படி செயல்பட வேண்டியதும் அவசியமாகும். வெட்கம் ஈமானின் ஒரு பகுதியாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே வெட்கமுள்ள ஆடை அணிவதும், பர்தா அணிவதும் நமது ஈமானை காப்பாற்றுவதற்கு அவசியமாகும். முன்னேற்றமடைந்த நாடுகள் சுதந்திரத்தின் பெயரிலோ , முன்னேற்றத்தின் பெயரிலோ தமது வெட்கத்தை முடிவுக்கு கொண்டு வருகிறார்கள் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் மார்க்கத்தை விட்டும் விலகிச் சென்று விட்டார்கள் என்பதாகும். ஆகவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட ஓர் அஹ்மதி பெண் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதாக உறுதிமொழி அளித்துள்ளார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ள அஹ்மதி ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவதாக உறுதிமொழி அளித்திருக்கின்றார்கள். மார்க்க போதனைகளின்படி அமல் செய்யும் போதுதான் முன்னுரிமை வழங்கப்பட்டதாக கருதப்படும். (ஜுமுஆ குத்பா 13, ஜனவரி, 2017)

கண்ணியத்திற்குரிய சகோதரிகளே! சந்ததிகளுக்கு தர்பிய்யத் அளிப்பது என்பது முக்கியமான பொறுப்பாகும். குழந்தைப் பருவம் முதலேயே பர்தா மற்றும் வெட்கம் குறித்த போதனையை வழக்கப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். இது தொடர்பாக அஹ்மதி தாய்மார்களுக்கு கவனமூட்டியவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறுகிறார்கள்:

எந்த தாய்மார்கள் தம் பிள்ளைகளின் உடை விஷயத்தில் குழந்தை பருவத்திலிருந்தே கவனம் செலுத்த மாட்டார்களோ அவ்வாறான பிள்ளைகள் பெரியவர்களான பிறகும் அந்த தாய்மார்களால் அவர்களை காப்பாற்ற இயலாமல் போய் விடுகிறது. சில சிறுமிகளின் உடல் வளர்ச்சி எவ்வாறு உள்ளது? என்றால், 10,11 வயதுடையவர்களாக இருந்தாலும் பார்ப்பதற்கு 14,15 வயதுடையவர்கள் போன்று இருக்கின்றனர். அவர்களுக்கு வெட்கம் மற்றும் உடை ஆகியவற்றின் பரிசுத்தத் தன்மையைக் குறித்து கற்றுக் கொடுக்கவில்லை என்றால், பெரியவர்களான பிறகு அவர்களிடத்தில் இந்த பரிசுத்தத் தன்மையை ஒருபோதும் உருவாக்க முடியாது. இன்னும் கூறுவதாயின், ஒரு சிறுமி பெரிய பெண்ணாக தெரியவில்லை என்றாலும் கூட சிறுவயது முதலே பெண் பிள்ளைகளிடத்தில் வெட்க உணர்வை உருவாக்கவில்லை என்றால், பெரியவர்களான பிறகு அந்த உணர்வை ஏற்படுத்துவது கடினமாகும். எனவே அவர்களுக்கு கூறுங்கள்; பாருங்கள்! நீங்கள் அஹ்மதி ஆவீர்கள்; உங்களுக்கு இங்குள்ள மக்களின் அரைகுறை ஆடையின் பக்கம் செல்ல வேண்டாம் ; நீங்கள் உலகிற்கு வழிகாட்ட வேணடியதுள்ளது. இறைவன் நமக்கு வழங்கிய போதனையின் படி நீங்கள் அமல் செய்ய வேண்டும். ஆகவே இறுக்கமான ஜீன்ஸ் மற்றும் அதற்கு மேல்பகுதியில் சிறிய பிளவுஸ் போன்றவை அணிவது ஓர் அஹ்மதி பெண்ணுக்கு அழகை கொடுக்காது என்று கூறி இவ்வாறு புரிய வைத்தால், பின்னர் குழந்தைப் பருவத்தில் சிந்தனைகளில் இடப்படுகின்ற விஷயம் கொஞ்சம் கொஞ்சமாக தாக்கத்தை ஏற்படுத்தி விடும். பருவ வயதை அடைந்த பிறகு ஹிஜாப் அல்லது ஸ்கார்ஃப், நீளமான கோட் அணிவதன் பக்கம் தாமாகவே கவனம் பிறந்து விடும். இல்லையென்றால், பெண் பிள்ளைகளின் நிலைமை எவ்வாறு ஆகிவிடும் என்றால், பள்ளிவாசலுக்கு வரும்போதும் ஜமாஅத் நிகழ்ச்சிகளுக்கு

திருக்குர்ஆனிலிருந்து...

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

வரும்போதும் தலையை மறைத்திருப்பார்கள். நல்ல உடையை அணிந்து இருப்பார்கள். ஆனால், வெளியே சுற்றும்போது தலையில் துப்பட்டாவும் இருக்காது. எந்த அளவுக்கென்றால், தலையிலிருந்து துப்பட்டா காணாமல் போயிருக்கும். ஸ்கார்ஃபை பற்றி பேச்சுக்கே இடமிருக்காது. சில பெண் பிள்ளைகளின் நிலை இவ்வாறு உள்ளது. ஆகவே தாய்மார்கள் தம் செயல் மூலமும் அறிவுரைகள் மூலமும் பெண் பிள்ளைகளுக்கு கவனமூட்டிக் கொண்டிருந்தால், நம் உடைகள் வெட்க உணர்வை கொண்டதாக இருக்க வேண்டும்; நமக்கென்று ஒரு தூய்மை உள்ளது என்று உணர்வூட்டிக் கொண்டிருந்தால் பல கசப்பான விஷயங்களில் இருந்து தாமும் தப்பித்துக் கொள்வார்கள். அவர்களின் பெண் பிள்ளைகளும் தப்பித்துக் கொள்வார்கள். நாம் நம் உணர்ச்சிகளின் சின்ன சின்ன தியாகங்களுக்காக கூட தயாராக மாட்டோம் என்றால், பெரும் பெரும் தியாகங்களை எவ்வாறு செய்வோம்?

(கனடா ஆண்டு மாநாடு, பெண்களுக்கு நிகழ்த்திய உரை, ஜூன் 28, 2008)

வீடுகளிலும் கூட வெட்க உணர்வை கொண்ட உடைகளை அணிய வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

வீட்டில் ஜீன்ஸ் மற்றும் டி-ஷர்ட் அணிந்து கொள்ளலாம் அல்லது சிறிய பிளவுஸ் அணிந்து கொள்ளலாம். அதனால் எந்த வித்தியாசமும் வந்து விடாது. அதில் தவறேதும் கிடையாது. வீட்டை விட்டு வெளியே செல்லும்போது நீளமான கோட்டை அணிந்து கொள்ளலாம் என்று சில பெண் பிள்ளைகள் புரிந்து வைத்துள்ளார்கள். ஆனால், வீட்டில் தம் தந்தை மற்றும் சகோதரர்களுக்கு முன்னாலும் கூட எவ்வாறான உடையை அணிய வேண்டும் என்றால், அது வெட்க உணர்வை கொண்டதாகவும், பொருத்தமானதாகவும் இருக்க வேண்டும். அவர்களுக்கு முன்னால் பர்தா அணிய வேண்டாம் என்று நிச்சயமாக அல்லாஹ் கூறி இருக்கின்றான்தான். ஆனால் வெட்க உணர்வை எந்நிலையிலும் ஈமானுடைய பகுதியாக இறைவன் ஆக்கியுள்ளான்.

வீட்டில் சில நேரத்தில் திடீரென்று ஏதேனும் உறவினர்களும் வந்து விடுகிறார்கள். தம் தந்தையர் அல்லது சகோதரர்களுக்கு முன்னாலும் திடீரென்று யாராவது வந்து விடும்போது அவர்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. ஆகவே அத்தகைய உடை அவர்களுக்கு முன்னால் பொருத்தமற்றதாக இருக்கின்றது. ஆகவே வீட்டிலும் கூட எவ்வாறான உடையை அணிய வேண்டும் என்றால், அது வெட்க உணர்வை உடையதாக இருக்க வேண்டும். (வீட்டில்) ஹிஜாப் அணிய வேண்டிய தேவை கிடையாது. தலையை மறைக்காமல் திரியலாம். அல்லாஹ்வின் மீதுள்ள நேசம் எதிர்பார்ப்பது என்னவென்றால், அவனுடைய கட்டளைகளின்படி அமல் செய்யப்பட வேண்டும் என்பதே! வெட்க உணர்வுள்ள உடை வீட்டுக்குள்ளும், வீட்டிற்க்கு வெளியேயும் அணிய வேண்டும். இது இறைவனுடைய கட்டளையாகும். வெட்க உணர்வை பூர்த்தி செய்வீர்கள் என்றால், பிறகு உங்களை யாரும் தடுக்க மாட்டார்கள். நீங்கள் டாக்டராகவும் ஆகலாம்; இன்ஜினியராகவும் ஆகலாம்; டீச்சராகவும் ஆகலாம் அல்லது மனித குலத்திற்கு பயனளிக்கக் கூடிய எந்தவொரு வேலைக்கும் செல்லலாம். நீங்கள் அதனுடன் முற்றிலும் சுதந்திரமானவர்களாக இருப்பீர்கள். ஒவ்வோர் அஹ்மதி பெண்ணுக்கும் ஒரு பரிசுத்தத் தன்மை உள்ளது. அதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். தம்முடைய பரிசுத்த தன்மையை கருத்தில் கொள்வது மற்றும் வெட்க உணர்வை வெளிப்படுத்துவது ஆகியவைதான் உங்களை நன்மைகளின் பக்கம் தூண்டக் கூடியதாக ஆக்கும், மேலும் அது உங்களை தீமைகளை விட்டு தடுக்கக் கூடியதாகவும் ஆக்கும். உங்களுடைய முன்மாதிரியே மற்றவர்களுக்கும், உங்களுடைய தோழிகளுக்கும் உங்களின் பக்கம் கவனத்தை திருப்புவதற்கும் காரணமாக அமையும். அதன் மூலமாக உங்களுடைய தப்லீஃக்கின் வழிகளும் திறக்கும்.

(ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு, ஜூன் 02,2005)

நார்வே தேசிய செயற்குழு உறுப்பினர்களுடன் நிகழ்ந்த ஒரு கூட்டத்தில் பர்தாவைக் குறித்து ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வழிகாட்டல் வழங்கியவாறு கூறினார்கள்:

வீடுகளில் பல்வேறு குடும்பங்கள் வந்து செல்வதுண்டு; எங்களுக்கு அவர்களுடன் நீண்ட கால தொடர்புகள் உள்ளன; நாங்கள் நீண்ட காலமாக ஒருவர் மற்றவரை அறிவோம் என்று கூறுகிறார்கள். இது சரியானதல்ல. ஒருவர் மற்றவருடைய வீடுகளுக்கு செல்லும்போது ஆண்கள் தனியாக அமர வேண்டும். பெண்கள் தனியாக திரைக்குப் பின்னால் அமர வேண்டும். சில சமயங்களில் நன்மையின் பெயரால் அனுதாபத்தின் பெயரால் மற்றவர்களுக்கு உதவி செய்தல் என்பதன் பெயரால் ஆணுக்கும், பெண்ணுக்கும் பரஸ்பர அறிமுகம் ஏற்பட்டு விடுகின்றது. சில சமயங்களில் அது தீய விளைவுகளுக்கு காரணமாக அமைந்து விடுகின்றது. ஆகவேதான், எந்த பெண்களின் கணவன்மார்கள் வீடுகளில் இல்லையோ அவ்வாறான பெண்ணின் வீடுகளுக்கு செல்வதிலிருந்தும் பெருமானார் (ஸல்) அவர்கள் தடை செய்து வந்துள்ளார்கள். அதற்கான காரணத்தை கூறும்போது, ஷைத்தான் மனிதனுடைய நரம்புகளில் இரத்தத்தை போன்று ஓடுகின்றான் என்று கூறினார்கள்.

இது தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அஹ்மதி பெண்களுக்கு வழிகாட்டல் வழங்கியவாறு மிகவும் நுட்பமான அறிவுரையை கூறுகிறார்கள்:

நீங்கள் புர்கா அணிந்து கொண்டு ஆண்களுடைய சபைகளில் அமர ஆரம்பித்து விட்டால், ஆண்களுடன் கைகுலுக்க ஆரம்பித்து விட்டால், பர்தாவின் நோக்கமே மரணித்து போய்விடும்.பர்தாவின் நோக்கம், அந்நிய ஆணும், பெண்ணும் பரஸ்பரம் வெளிப்படையாக சந்திக்க வேண்டாம் என்பதே ஆகும். இருவருக்குமான இடங்கள் தனித்தனியாக இருக்க வேண்டும். நீங்கள் உங்களுடைய தோழியின் வீட்டுக்குச் சென்று அவளுடைய கணவர் அல்லது சகோதரர்கள் அல்லது உறவுக்கார ஆண்களுடன் சுதந்திரமான சூழலில் அமர்ந்திருக்கின்றீர்கள் என்றால், அது முகத்தை மறைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாலும் சரி அல்லது முகத்தை மறைத்துக் கொண்டு ஒருவருடன் கை குலுக்கிறீர்கள் என்றாலும் சரி; இது பர்தா ஒன்றும் கிடையாது. (ஆண், பெண் ஆகிய) ஒவ்வொருவரின் சபையும் தனியாக இருக்க வேண்டும். எந்த அளவுக்கு என்றால், விபச்சாரிகளைப் போன்ற பெண்கள் அல்லது அசுத்தமான சிந்தனையை கொண்ட பெண்கள் ஆகியோரிடமும் பர்தா அணிய வேண்டும் என்று திருக்குர்ஆன் கட்டளையிட்டுள்ளது. அவர்களை விட்டும் உங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டளை உள்ளது. ஆகவே முன்னெச்சரிக்கையாக இருங்கள்; இவ்வாறான சபைகளை விட்டு தப்பித்துக் கொள்ளுங்கள்.

கண்ணியத்திற்குரிய சகோதரிகளே! வெட்கம் மற்றும் பார்வையை தாழ்த்தும் பழக்கத்தை தமதாக்கிக் கொள்வதுடன் பெண்கள் தமது அழகையும் வெளிப்படுத்தக் கூடாது என்று வலியுறுத்தியவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு அறிவுரை கூறுகிறார்கள்:

அல்லாஹ்வின் கட்டளைகளில் ஒன்று ஆண், பெண் ஆகியோரின் பார்வைகள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ள வேண்டாம் என்பதாகும். அவர்களிடத்தில் ஒரு வெட்க உணர்வு இருக்க வேண்டும். இரண்டாவது விஷயம் என்னவென்றால், தம் அழகை மறைத்துக் கொள்ள வேண்டும். எவ்வாறான உடையை அணிந்து கொள்ள வேண்டும் என்றால், அதன் மூலம் உடல் காட்சிப் பொருளாக ஆக்கப்படக் கூடாது. மூன்றாது விஷயம், தம் அழகை மறைப்பதற்காக தமது கழுத்துப் பகுதி, தலை, கன்னம், மற்றும் முன்பகுதிகளை மூடி வைக்க வேண்டும். அணிகின்ற புர்கா தளர்வானதாக இருக்க வேண்டும். மேக்கப் செய்து விட்டு, முகத்தை திறந்து வைத்து திரியக் கூடிய பெண்களும் அழகை வெளிப்படுத்தும் வட்டத்தில் வந்து விடுகிறார்கள். அதே போன்று கூந்தலை காட்சிப் படுத்தும் பெண்களும் அழகை வெளிப்படுத்தும் வட்டத்தில் வந்து விடுகிறார்கள். ஆகவே தலையை மூட வேண்டும். குறைந்தபட்சம் முகத்தை எந்த அளவு மறைக்க வேண்டும் என்றால், முகம் காட்சிப் பொருளாக ஆக்கப்பட்டிருக்கக் கூடாது. பொருத்தமான உடையை அணிய வேண்டும். இது குறைந்தபட்ச பர்தாவாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வலியுறுத்திக் கூறும்போது, குறைந்தபட்சம் இந்த தரம் இருக்க வேண்டும் என்றார்கள். (யூ.கே, ஆண்டு மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய உரை, ஜூலை 30, 2010, அல்ஃபஸ்ல் இன்டர் நேஷனல், வெளியீடு 11 மார்ச், 2011)

வெட்கம், நாணம் ஆகியவற்றை கருத்தில் கொண்டவாறு திருக்குர்ஆனுடைய கட்டளையான பர்தாவை மேற்கொள்வதுதான் ஓர் அஹ்மதிப் பெண்ணுடைய தனிச்சிறப்பாக இருக்க முடியும். இந்த முக்கியமான பொறுப்பின் பக்கம் ஜமாஅத்தினர்களுக்கு மீண்டும், மீண்டும் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:

நம்பிக்கை கொண்ட ஒரு பெண்ணுக்கு அல்லாஹ்வின் மிக முக்கியமான கட்டளை ஒன்றும் உள்ளது. அது, தம் அழகை மறைத்துக் கொள்ள வேண்டும்; பர்தா அணிய வேண்டும் என்பதாகும். சில படித்த பெண் பிள்ளைகளும், பெண்களும் சமூகத்தின்

தாக்கத்திற்கு உள்ளாகி, அச்சத்தின் காரணமாக தற்காலத்தில் பர்தாவை கருத்தில் கொள்வது கிடையாது. அவர்களின் உடை ஃபேஷனை நோக்கி அதிகமாக சென்று கொண்டிருக்கின்றது. பள்ளிவாசலுக்கு செல்லும்போதோ, அல்லது (தொழுகை) மையங்களுக்கு வரும்போதோ அதற்காக பர்தாவோ அல்லது நல்ல உடையையோ அணிந்து வந்து விடுகிறார்கள். ஆனால், கடைவீதிகளில் அவர்கள் தம் உடையை கருத்தில் கொள்வதில்லை என்று சில முறையீடுகள் வருகின்றன. ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். வெட்கம் என்பது ஈமானுடைய ஒரு பகுதியாகும். நாணம் என்பது பெண்களின் ஒரு கருவூலம் ஆகும். ஆகவே எப்போழுதும் வெட்க உணர்வுள்ள உடையை அணிந்து கொள்ள வேண்டும்.

எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்; திருக்குர்ஆனில் அல்லாஹ் பர்தாவைக் குறித்து கட்டளையிட்டுள்ளான் என்றால், நிச்சயமாக அதற்கு ஏதேனும் முக்கியத்துவம் இருக்கும். இந்த மேற்கத்திய மக்களைப் போன்று ஆகிவிடாதீர்கள். பர்தாவின் கட்டளையோ பழமையானதாக ஆகிவிட்டது அல்லது குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்காக மட்டுமே இருந்தது என்று அவர்கள் கூறுகிறார்கள். திருக்குர்ஆனின் எந்த ஒரு கட்டளையும் எப்பொழுதும் பழமையானதாக ஆகவும் செய்யாது; மாற்றவும் படாது. ஒரு காலத்தில் இவ்வாறான சிந்தனைகள் தோன்றும் என்று அல்லாஹ்வுக்கு தெரியும். ஆகவேதான் இந்த நிரந்தரமான கட்டளையை அவன் இறக்கியுள்ளான். நாவளவில் கூறுவதால் மட்டும் அல்லாஹ்வின் அடியார்களாக நீங்கள் ஆக முடியாது. மாறாக, திருக்குர்ஆனில் என்ன அறிவுரைகள் செய்யப்பட்டுள்ளனவோ, என்ன கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளனவோ அவற்றின்படி செயல்பட்டால் தான் நம்பிக்கை கொண்ட பெண்கள் என்று உண்மையான முறையில் அழைக்கப்படுவீர்கள். (ஜெர்மனி மாநாட்டில் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு, 01-09-2007)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தமது ஒரு சொற்பொழிவில் அஹ்மதி முஸ்லிம் பெண்களும், சிறுமிகளும் உண்மையான முறையில் வெட்கத்தையும், கற்பையும் பாதுகாக்க வேண்டும் என்று கவனமூட்டியவாறு மிகவும் அழகிய முறையில் இவ்வாறு கூறுகிறார்கள்:

நாங்கள் தலையை மறைத்து விட்டோம்; இது போதுமானது என்று சில பெண் பிள்ளைகள் கூறுகிறார்கள். ஆனால், அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் எவ்வாறு கட்டளையிட்டுள்ளார்களோ அவ்வாறு தலையை மறைப்பதில்லை. தலை முடி தெளிவாக தெரிந்து கொண்டிருக்கும். தலை பாதி மூடி இருக்கும்; பாதி திறந்திருக்கும். கழுத்தும் கூட தெரிந்து கொண்டிருக்கும். *கோட்* அணிந்திருப்பார்கள் என்றால் முழங்கை திறந்திருக்கும். முழங்கால்களுக்கு மேலே கோட் இருக்கும். இது ஓர் அஹ்மதி பெண்ணுடைய வெட்கமும் கிடையாது; அஹ்மதி பெண்ணுடைய சுதந்திரத்தின் வரம்பும் கிடையாது. மாறாக, ஒரு பெண் இந்த வழிமுறையின் மூலமாகவும், இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வதாலும் தம் மானத்தின் மீது அவதூறுகளை சுமத்தக் கூடியவளாகவும் ஆகிவிடுகின்றாள்.

தமிழாக்கம்
முரப்பி
A.P.A தாரிக் அஹ்மது

* * * * * * * *

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

1-ம் பக்கத் தொடர்ச்சி...(மல்ஃபூஸாத்.......)

பக்கம் சைகை செய்துள்ளார்கள். நிராகரிப்பாளர்களுடன் போர் புரிந்த ஏராளமான நம்பிக்கையாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து கொண்டபோது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரை முஹம்மது (ஸல்) என்று கூறியுள்ளார்கள்.ஏனெனில் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் சுயமே கம்பீர வடிவிலானவர்களாக இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரை அஹ்மது என்று கூறியுள்ளார்கள். ஏனெனில், அவர்கள் சுயமே நிரந்தரமாக மென்மையின் வடிவிலானவராக இருந்தார்கள். தற்போது நமது இயக்கமும் மென்மையின் வடிவிலானதாக உள்ளது. எனவே இந்த காரணத்தினால் அதன் பெயர் அஹ்மதி என்றானது.
(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 88, காதியான் பதிப்பு 2018)

* * * * * * * *

1-ம் பக்கத் தொடர்ச்சி...(நபிமொழி.......)

அறைந்து விட்டீரா? அப்போது அப்துல்லாஹ் பின் ரவாஹா அவர்கள் கூறினார்கள்: ஹுஸுர் அவளோ கிராமப்புறவாசி ஆவாள்; அறிவீனமான பெண் ஆவாள்; அவளுக்கு மார்க்கம் போன்றவை எல்லாம் தெரியாது.

ஹுஸுர் (ஸல்) அவர்கள் அந்தப் பெண்மணியை அழைத்து வரச் செய்தார்கள். மேலும்,அல்லாஹ் எங்கே உள்ளான்? என்று கேட்டார்கள். வானத்தில் என்று அவள் கூறினாள். பின்னர், நான் யார்? என்று அன்னார் (ஸல்) அவளிடம் கேட்டார்கள். அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) என்று அவள் பதிலளித்தார். இதனைக் கேட்ட ஹுஸுர் (ஸல்) அவர்கள் இவர் நம்பிக்கை கொண்ட பெண்மணி ஆவார்; இவரை விடுதலை செய்து விடுங்கள் என்று கூறினார்கள்.

(ஹதீக்கத்துஸ் ஸாலீஹீன், ஹதீஸ் எண்: 179)

* * * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்

∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

1-ம் பக்கத் தொடர்ச்சி...(தஃப்ஸீரே கபீர்.......)

விடுகின்றனர். பின்னர் மனிதன் இந்த நிலையிலிருந்தும் முன்னேற்றம் அடைகின்றான். மேலும் ஐந்தாவது படித்தரத்தை அடைந்து மலக் எனும் வானவராகி விடுகின்றான். அதாவது அவருடைய இறை ஞானம் எத்தகைய முன்னேற்றம் அடைந்து விடுகின்றது என்றால் இறைவனுடைய அனைத்துக் கட்டளைகளின் மீதும் செயல்படுவது அவர்களின் உணவாக ஆகிவிடுகின்றது. மேலும், வானவர்கள் எவ்வாறு يَفْعَلُوْنَ مَا يُؤْمَرُوْنَ

என்பதை உண்மைப்படுத்தக் கூடியவர்களாக இருக்கின்றனரோ அதே போன்று இத்தகைய மனிதனும் வல்ல இறைவனின் அனைத்துக் கட்டளைகளையும் நிறைவேற்றுகின்றார். மேலும் அவரிடத்தில் ஒருபோதும் கவனமின்மை ஏற்படுவதில்லை. அப்படிப்பட்ட மக்களைக் குறித்தே அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

وَالْمَلٰٓئِكَةُ يَدْخُلُوْنَ عَلَيْهِمْ مِّنْ كُلِّ
بَابٍ○سَلٰمٌ عَلَيْكُمْ بِمَا صَبَرْتُمْ فَنِعْمَ
عُقْبَى الدَّارِ○

அர் ரஃது24-25)

பொருள்: அத்தகைய மக்களிடம் வானவர்கள் ஒவ்வொரு வாயில் வழியாகவும் வருவார்கள். நீங்கள் இறைவனின் வழியில் உறுதிப்பாட்டை மேற்கொண்டிருப்பதனால் உங்களுக்குச் சாந்தி உண்டாவதாக!

தற்போது பாருங்கள்! உங்களுக்கு அந்த வீட்டின் முடிவு எவ்வளவு நன்றாக இருக்கும்? இந்த மக்கள் வானவர்களின் பண்புகளை கொண்டவர்களாக இருப்பார்கள். எனவே அவர்களை கண்டதுமே வானவர்கள் அவர்களிடம் ஓடிச் செல்வார்கள். மேலும் அவர்களுக்கு அல்லாஹ்வின் நெருக்கம் மற்றும் அவனுடைய அருட்கொடைகளைப் பற்றிய நற்செய்தியை வழங்குவார்கள்.

ஆனால், இந்த விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, இந்த வசனத்திற்கு இந்தப் பொருள் கிடையாது. அதாவது வானவர்கள் தங்களது எண்ணிக்கையில் மிகுதியானவர்களாக இருப்பதால் ஒரு வாசலுக்குப் பகரமாக பல வாசல்களின் வழியாக நுழைவார்கள் என்பது இந்த வசனத்தின் பொருளன்று. மாறாக இதன் அசல் பொருள் என்னவென்றால், ஒவ்வொரு வாசலுக்கும் உரிய வானவர் அவரிடம் வருவார். மேலும், அவருக்கு வாழ்த்து கூறுவார். நீங்கள் இந்த போராட்டத்தில் வெற்றி பெற்று விட்டீர்; அதில் நானும், நீங்களும் இணைந்து ஷைத்தானுடன் போரிட்டிருந்தோம். ஏனெனில், தீமையானது மனிதனின் உள்ளத்தில் பல வழிகளின் வழியாக நுழைகின்றது. சிலசமயம் கண்களின் மூலமாக தூண்டப்படுகின்றது. சிலமுறை காதுகளின் மூலமாக தீமை தூண்டப்படுகின்றது. சிலமுறை தொடுவதன் மூலமாகவும், சுவைப்பதன் மூலமாகவும் தீமை தூண்டப்படுகின்றது. ஒவ்வொரு பாதையின் பாதுகாப்பிற்காகவும் இறைவன் வானவரை நியமித்திருக்கின்றான். மனிதன் அவன் மீது வெற்றி பெற்று விடும்போதோ ஒவ்வொரு வாயிலின் வானவரும் அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக வருவார்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6,பக்கம் 146-147, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * * *

**ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின்**

**அமெரிக்க சுற்றுப் பயணம் - 2013**

**நான் இந்த பள்ளிவாசலை திறந்து வைக்கும் நேரத்தில் இந்த பள்ளிவாசல் அனைத்து மக்களின் பார்வையிலும் அவர்கள் அஹ்மதிகளாக இருந்தாலும் அல்லது அஹ்மதி அல்லாதவர்களாக இருந்தாலும் அல்லது முஸ்லிம் அல்லாதவர்களாக இருந்தாலும் அமைதி மற்றும் சகோதரத்துவத்தை பரப்புவதற்கான காரணியாக நிருபணமாகும்**

**அனைத்து மத மக்களுக்கும் நம்முடைய இந்த பள்ளிவாசலின் கதவுகள் திறந்து இருக்கும். இந்த பள்ளிவாசல் மனிதகுலத்திற்கு இறைவனுடைய அருட்கொடை வெளிப்படுவதற்கு காரணியாக இருக்கிறது**

**அனைத்து மதங்களை சேர்ந்த நம்பிக்கை கொண்ட மக்களும் மேலும், மத நம்பிக்கை இல்லாத மக்களும் ஒன்றுபட வேண்டிய அவசியம் இன்று உலகிற்கு அவசியமாக இருக்கிறது. அனைத்து இனங்கள் மற்றும் சந்ததிகளின் ஒட்டு மொத்த மனித குலத்தின் நலனிற்காக இந்த உலகை அழிவிலிருந்து காக்க ஒன்றுபடுவது மிக மிகத் தேவையாக இருக்கிறது**

**முழு உலகப் போருக்கான அடையாளங்கள் தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இந்தப் போரின் அழிவிலிருந்தும் தீய விளைவுகளில் இருந்தும் தப்பிக்க ஒரே வழிதான் இருக்கிறது. அது அந்த ஏக இறைவனிடம் மன்றாடுதலாகும்**
**அவன் தன்னுடைய படைப்பினங்களின் மீது கருணை உள்ளவன் ஆவான். உலகம் அந்த இறைவனிடம் குனிந்து விட வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை ஆகும்**

**வான்கூவர் பிரிட்டிஷ் கொலம்பியாவில் மஸ்ஜித் பைத்துர் ரஹ்மான் திறப்பு விழா நிகழ்ச்சியில் ஹுஸூர் அவர்களின் சிறப்புரை**

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

## (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் வான்கூவர் கனடாவில் மேற்கொண்ட பணிகளின் சுருக்கமான அறிக்கை

**அறிக்கை தயாரிப்பு - அப்துல் மாஜித் ஸாஹிப் தாஹிர்**
**(அடிஷனல் வகீலுத் தப்ஷீர், லண்டன்)**

**மஸ்ஜித் பைத்துர் ரஹ்மான் (பிரிட்டிஷ் கொலம்பியா, கனடா) திறப்பு விழாவின் போது ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஆற்றிய உரையின் தொடர்ச்சி**

**(பாகம் - 2)**

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

திருக்குர்ஆனில் சூரா அல் ஹஜ்ஜில் வசனம் 40-ல் இவ்வாறு வருகிறது:

எதிரிகள் செய்த அநீதிகள் மற்றும் அக்கிரமங்களின் அடிப்படையில் முஸ்லிம்கள் தங்களை தற்கொள்வதற்காக போர் புரிவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆக, அல்லாஹ் கூறுகின்றான்:

எந்த மக்களுக்கு எதிராக போர் திணிக்கப்பட்டதோ அவர்களுக்கு (போருக்கான) அனுமதி வழங்கப்படுகின்றது. ஏனெனில், அவர்கள் மீது அநீதியிழைக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவி புரிவதற்கு வல்லமை படைத்துள்ளான்.

இந்த அனுமதிக்கான பின்னணி மற்றும் அந்த காலத்து நிலைமைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் அமைதியை நிலைநாட்டுவதற்கு எல்லா முயற்சிகளும் செய்தனர். மேலும் எல்லா வகையான தியாகங்களும் செய்தனர். முஸ்லிம்கள் உச்சபட்ச அநீதி மற்றும் அக்கிரமங்களை மட்டும் சகித்துக் கொள்ளவில்லை. மாறாக, அவர்களுக்கு எதிராக போருக்கான அறிவிப்பும் செய்யப்பட்டது. மேலும் அவர்களின் வீடுகளிலிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். சுருக்கமாக, இஸ்லாத்தின் எதிரிகளின் அநீதிகளும், அக்கிரமங்களும் எல்லா ரீதியிலும் எல்லையை கடந்து சென்று விட்டிருந்தது. அல்லாஹ் தற்காப்புப் போருக்கான அனுமதி வழங்கப்பட்ட அந்த தருணம் மிகவும் முக்கிய தருணமாக இருந்தது. மேலும் அத்துடன் அல்லாஹ் முஸ்லிம்களுக்கு உதவிக்கான வாக்குறுதியும் வழங்கியிருந்தான். உலகியில் ரீதியாக எதிர் தரப்பிற்கு எதிரில் முஸ்லிம்கள் மிகவும் பலவீனர்களாகவும், ஆதரவற்றவர்களாகவும், உதவியற்றவர்களாகவும் இருந்தனர். ஆனால், இந்த உண்மைத்துவத்திற்கு மத்தியில் எல்லா வல்லமைகளுக்கும் அதிபதியான அல்லாஹ் முஸ்லிம்களுடன் உதவி மற்றும் வெற்றிக்கான வாக்குறுதி வழங்கியிருந்தான். அவ்வாறே நிகழ்ந்தது என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. மக்கத்து காஃபிர்களிடம் ஒரு வலிமை வாய்ந்த, முறையான இராணுவம் இருந்தது. அது போதுமான போர் தளவாடங்களால் முழுமையாக நிறைந்திருந்தது. முஸ்லிம் இராணுவத்தின் எண்ணிக்கையில் எதிரிகளின் மூன்றில் ஒரு பங்காகவே இருந்தது. அவர்களிலும் கூட அநேகமாக ஒரு சிலரிடம் மட்டுமே ஏதாவது போர்த் தளவாடங்கள் இருந்தன. இவ்வளவு மாபெரும் வித்தியாசம் இருந்தபோதிலும் முஸ்லிம்கள் எதிரிகளை ஓர் அற்புதமான முறையில் தோல்வியுறச் செய்து விட்டார்கள். ஏனெனில், அவர்கள் உண்மைக்காக போர் புரிந்து கொண்டிருந்தனர். மேலும், அமைதியின்மை மற்றும் அநீதியை அழத்திக் கட்டுவதற்காக போர் புரிந்தனர். எனவே முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேலும் அல்லாஹ்வின் உதவியும் அவர்களுடன் இருந்தது.






இதன் அடுத்த வசனத்தில், அல்லாஹ் மிகவும் தெளிவாக இதனை எடுத்துரைத்து விட்டான்; அதாவது, ஒருவேளை இந்த அநீதிக்கு முடிவு கட்டவில்லையென்றால் பின்னர் ஒவ்வொரு மார்க்கமும் அநீதி மற்றும் அக்கிரமத்திற்கு இலக்காகி விடும்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்:

எங்களின் இறைவன் அல்லாஹ் என்று கூறியதற்காக மட்டும், அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கும் (போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது). மேலும் அல்லாஹ் சில மனிதர்களுக்கு மற்றவர்களைக் கொண்டு பதிலடி கொடுக்க வைக்கவில்லையாயின், கோயில்களும், ஆலயங்களும், மடங்களும் அல்லாஹ்வின் பெயர் அதிகமாக நினைவு கூரப்படும் பள்ளிவாயில்களும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும். மேலும் அல்லாஹ் அவனு(டைய மார்க்கத்து)க்கு உதவுபவர்களுக்கு நிச்சயமாக உதவுவான். நிச்சயமாக அல்லாஹ் சக்தி வாய்ந்தவனும், மிகைத்தோனும் ஆவான். (அல்-ஹஜ்:41)

இந்த வனம் தெளிவாக இந்த விஷயத்தை கூறுகின்றது: அதாவது, அல்லாஹ் தற்காப்புப் போருக்கான அனுமதி கொடுக்காமல் இருந்திருந்தால், பின்னர் எந்த மார்க்கமும் பாதுகாப்பாக இருந்திருக்காது; அதே போன்று எந்தவொரு வணக்க ஸ்தலமும், கோயிலும், யூதர்களின் ஆலயங்களும், அதே போன்று பள்ளிவாசல்களும் அபாயங்களிலிருந்து பாதுகாப்பானதாக இருந்திருக்காது. இன்னும் கூறப்போனால், எதிரிகள் அவற்றை அழித்திருப்பார்கள். மேலும், எந்த மார்க்கத்தின் அடையாளமும் எஞ்சியிருந்திருக்காது.

அல்லாஹ் கூறுகின்றான்: எவரையும் அவரது மார்க்கத்தின் காரணமாக இலக்காக்குவது ஒரு பயங்கரமான மற்றும் அபாயகரமான குற்றமாகும். மேலும், இந்த விஷயத்தை அவன் மிகவும் வெறுக்கின்றான். ஆக, இதன் காரணமாக சில குறிப்பிட்ட சூழல்களில் அப்படிப்பட்ட மக்களை வலிமையின் மூலமாக தடுப்பதை ஆகுமானதாக ஆக்கியிருக்கின்றான்.

இங்கு மற்றுமொரு விஷயமும் கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். அதாவது, நான் எந்த வசனத்தின் சான்றை முன்வைத்துள்ளேனோ அந்த வசனத்தில் அல்லாஹ் இந்த விஷயத்தை கூறவில்லை. அதாவது, மஸ்ஜிதுகளின் பாதுகாப்பிற்காக மட்டுமே வலிமையை பயன்படுத்த வேண்டும் என்று கூறவில்லை. மாறாக, ஏனைய மார்க்கங்களின் வணக்க ஸ்தலங்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் இறுதியில் மஸ்ஜிதுடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நான் ஒருமுறை மீண்டும் இந்த விஷயத்தை தெளிவுபடுத்தி விடுகிறேன். அதாவது நிராகரிப்பாளர்களுக்கு எதிராக போரிடுவதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி நல்கப்பட்டபோது அது வெறும் இஸ்லாத்தின் தற்காப்பு மற்றும் இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காக மட்டுமே வழங்கப்படவில்லை. மாறாக, அதன் நோக்கம் அனைத்து மார்க்கங்கள் மற்றும் அனைத்து வணக்க ஸ்தலங்களையும் பாதுகாப்பதற்காக இருந்தது. மார்க்க சுதந்திரம் என்ற அடிப்படையில் முதலாவது சட்டத்தை திருக்குர்ஆன் தான் எடுத்துரைத்துள்ளது என்று கூறுவது ஒருவகையில் சரியானதாகும். வேறு சொற்களில், மஸ்ஜித் கட்டப்படும்போதெல்லாம் மார்க்க சுதந்திரத்திற்கான புதிய அத்தியாயம் திறக்கப்படுகின்றது. இது வெறும் மார்க்க சுதந்திரம் மட்டும் கிடையாது; மாறாக, அனைத்து மார்க்கங்களையும் பாதுகாப்பதற்காகன கட்டளையும் வழங்குகின்றது.

ஹுஸூர் அன்வர் அய்யதஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்:

கனடா எந்த சில நாடுகளில் ஒன்றாக கணக்கிடப்படுகிறது என்றால், அநேகமாக இரண்டாவது அல்லது மூன்றாவது நாடாக இருக்கும். அந்த நாடு முறையாக மார்க்க சுதந்திரத்திற்காக ஓர் அலுவலகத்தை திறந்துள்ளது. என்னைப் பொருத்த வரை இந்த சிறந்த நடவடிக்கைக்காக கனடா அரசாங்கம் போற்றுதலுக்குரியதாக இருக்கின்றது. மேலும் வாழ்த்துகளுக்கு உரிமை படைத்ததாக இருக்கின்றது. இதனை நான் ஏன் கூறுகின்றேன் என்றால், கனடா நாட்டிற்குள்ளும், நாட்டிற்கு வெளியிலும் எப்படிப்பட்ட விஷயத்தை அடைவதற்கு முயற்சி செய்கின்றது என்றால், அதனால் பூமி மற்றும் வானத்தின் படைப்பாளன் மகிழ்ச்சியடைகின்றான்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் இந்த விஷயத்தின் மீது நம்பிக்கை கொள்கிறோம்; அதாவது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் அவர்கள் இக்காலத்தின் இமாம் ஆவார்கள்; அன்னார் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின் மறுமலர்ச்சிக்காக வந்துள்ளார்கள். இதன் காரணமாக எங்களின் வாதம் இதுவாகும். அதாவது, இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் அசல் போதனைகளின் படி அமல் செய்கின்ற அஹ்மதிகள் நாங்கள் ஆவோம்; நாங்கள் முழு உலகையும் இஸ்லாத்தின் சிறப்பான மற்றும் உயர்ந்த போதனைகளால் ஒளிபெறச் செய்வதற்கு சாத்தியமான எல்லா முயற்சிகளையும் நாங்கள் செய்கின்றோம்.


எனவே நாங்கள் கனடாவின் அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு முழுமையான ஆதரவு அளிக்கின்றோம். மேலும் உலகில் மார்க்க சுதந்திரத்தை நிலைபெறச் செய்வதற்காக அவர்களின் முயற்சிகளில் முழுமையான ஒத்துழைப்பை நாங்கள் அளிப்போம். எந்த விஷயத்தை நாங்கள் பிரச்சாரம் செய்கின்றோமோ அந்த விஷயத்தின் படி நாங்கள் அமல் செய்கின்றோம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. மேலும், மார்க்க சுதந்திரத்திற்கான அந்த அலுவலகத்தை எங்களது தலைமையகமான பீஸ் வில்லேஜ் டொரோன்டோவில் துவக்கப்பட்டிருப்பதைப் போன்று அதனை நாங்கள் செயல் வடிவில் வெளிப்படுத்தியும் இருக்கின்றோம்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நான் இதனையும் கூற விரும்புகின்றேன். அதாவது தற்போது நம்முடன் இருக்கின்ற DR. Andrio Bennett அவர்கள் அந்த துறைக்கான முதலாவது தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த நிகழ்ச்சிக்கு முன்னால் அன்னாருடன் எனது சந்திப்பு நிகழ்ந்தும் விட்டது. நாங்கள் ஒவ்வோர் ஆண்டும் நடத்துகின்ற லண்டனில் அமைதி கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக இவர்கள் வருகை தந்து கொண்டிருந்தார்கள். நான் கண்டுள்ளேன். இவர்கள் மிகவும் பரந்த உள்ளம் படைத்தவராகவும், நட்பை பேணுவதுடன் இந்த பொறுப்பை முழுமையான முறையில் நிறைவேற்றுவதற்காக முழு உத்வேகமும் முழுமையான உறுதியும் கொண்டிருக்கின்றார்கள். அல்லாஹ் இவர்களுடைய இந்த உறுதியை எப்போதும் நிலை நிறுத்துவானாக!

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:


கனடா அரசாங்கமும், கனடா மக்களும் அல்லாஹ்விற்கு விருப்பமான அந்த அனைத்து செயல்களையும் மேற்கொள்ள வேண்டும் என்பது எனது பிரார்த்தனையும் ஆகும். மேலும் இந்த மகத்தான சமுதாயத்தின் மீது அல்லாஹ்வின் கருணைகளின் மழை பொழியும் பொருட்டு இவர்கள் அல்லாஹ்வின் கோபத்திற்கு காரணமாக அமைகின்ற அந்த செயல்களிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் நான் பிரார்த்தனை செய்கின்றேன்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: தற்போது நான் மீண்டும் மஸ்ஜித் தொடர்பாக சில விஷயங்களை கூற விரும்புகின்றேன். நான் முன்னர் கூறியது போன்று, இந்த நகரம், இந்த பகுதி இன்னும் கூறப்போனால், முழு நாட்டு மக்களும் தங்களது உள்ளத்திலும், மூளையிலும் உருவாகக் கூடிய ஐயங்களையும், சந்தேகங்களையும் மற்றும் பதற்றத்தையும் முழுமையாக அகற்றிவிடுங்கள். இந்த மஸ்ஜித் குறித்து நீங்கள் அச்சப்படுவதற்கு எந்த அவசியமும் இல்லை. ஏனெனில், இந்த மஸ்ஜித் அன்பு. நேசம் மற்றும் சகோதரத்துவத்திற்கான தூதுச் செய்தியை மட்டுமே வழங்குகின்றது. மேலும், இந்த மஸ்ஜித் அமைதி மற்றும் மத நல்லிணக்கத்திற்கான உத்திரவாதமாகும். இந்த மஸ்ஜிதிற்கு பைத்துர் ரஹ்மான் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. ரஹ்மான் என்ற


Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX



- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 Thursday 25 SEP 2025 Issue No.39

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

சொல்லானது இறைவனின் பெயர்களின் ஒரு பெயராகும். மேலும் அவனது ஒரு பண்பாகும். இதன் பொருள் என்னவென்றால், அல்லாஹ் அனைத்து படைப்பினங்கள் மற்றும் அனைத்து சமுதாயங்களுக்கும் அப்பாற்பட்டு, அவர்கள் எந்த இனத்துடனும், மார்க்கத்துடனும் தொடர்புடையவர்களாக இருந்தாலும் சரி! அவர்களுக்கு அவன் பரிவு மிக்கவனும், மீண்டும், மீண்டும் கருணை காட்டுபவன் ஆவான். இன்று உலகியல் வணங்கிகள் உலகில் எங்கு மக்களின் பெரும்பான்மை அல்லாஹ்விற்குரிய உரிமைகளை வழங்குவதில்லையோ அங்கு இறைவன் தனது அனைத்து படைப்பினங்களுக்கும் அருளிக் கொண்டிருக்கின்றான். அல்லாஹ்வின் பண்புகளை மேற்கொள்ளும்படி முஸ்லிம்களுக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. ஆக, ஒரு உண்மையான முஸ்லிமிற்கு அல்லாஹ்வின் படைப்பினத்திற்காக பரிவும், கருணை உள்ளமும் கொண்டிருப்பதும் அவசியமாகும். பிறருக்கு துன்பம் மற்றும் வேதனை கொடுப்பதற்கு பகரமாக முஸ்லிம்கள் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஒரு முஸ்லிம் கருணை உள்ளம் மற்றும் பரிவின் மூலமாகவே இறைவனுடைய கருணைகள் மற்றும் அருட்களை ஈர்க்கக் கூடியவராக ஆக முடியும். ஒரு உண்மையான முஸ்லிம் பிறருக்கெதிராக அநீதியில் பங்கெடுப்பதும், குழப்பம் விளைவிப்பதும் சாத்தியமற்றதாகும். ஒரு உண்மையான முஸ்லிமிற்கு ஒரு மஸ்ஜிதை அச்சம் மற்றும் வெறுப்பின் இடமாக ஆக்கிவிடுவதும், மக்களை அதிலிருந்து விலக்கி வைப்பதும் சாத்தியமற்றதாகும். இன்னும் கூறப்போனால், இதற்கு எதிராக மஸ்ஜித் அல்லாஹ்வை வணங்குவதற்கான இடமாக இருக்கின்றது. மேலும், இது அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான தூதுச் செய்தியை வழங்குகின்றது. மஸ்ஜித் எப்படிப்பட்ட இடம் என்றால், அது காந்தத்தைப் போன்று மக்களை தன் பக்கம் ஈர்க்கின்றது.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: எனவே இந்த மஸ்ஜிதின் திறப்பு விழா சந்தர்ப்பத்தின்போது, நான் அறிவிக்கின்றேன்; அதாவது இந்த மஸ்ஜித் ஒருவர் அஹ்மதி ஆவார் அல்லது அஹ்மதி அல்லாதவர் ஆவார் அல்லது முஸ்லிம் ஆவார் என்பதற்கு அப்பாற்பட்டு அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தை பரப்புவதற்கான காரணியாக நிரூபணமாகும். அனைத்து மார்க்கங்களின் மக்களுக்காக நமது மஸ்ஜிதுடைய கதவுகள் திறந்திருக்கும். ஏனெனில், இந்த மஸ்ஜித் இறைவனின் மனிதகுலத்திற்காக ரஹ்மானிய்யத்தின் வெளிப்பாடாகும்.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நான் இதனையும் கூறிவிடுகின்றேன். அதாவது இந்த மஸ்ஜிதுடைய கட்டுமானத்துடன் அஹ்மதி முஸ்லிம்களுக்கு பரந்துபட்ட சமூகத்தில் பொறுப்புகளும் அதிகரித்து விடுகின்றது. உள்ளூர் அஹ்மதிகளுக்கு கோவில், தேவாலயம் மற்றும் வணக்க ஸ்தலங்களில் பாதுகாப்பதற்காக எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ் அஹ்மதி அல்லாதவர்கள் சுயமே இந்த விஷயத்தை நேரில் பார்ப்பார்கள். அதாவது அவர்கள் எப்போதெல்லாம் ஏதாவது ஒரு விஷயத்திற்கான தேவையோ அல்லது உதவியோ ஏற்படுமோ அப்போது அஹ்மதிகளே அவர்களுக்கு உதவி செய்வதற்காகவும், அனைத்து மக்களின் இறை வணக்க ஸ்தலங்களை பாதுகாப்பதற்காகவும் எல்லாரையும் விட முன்னணியில் இருப்பார்கள்.

நான் நம்புகின்றேன்; மேலும், நான் துஆ செய்கின்றேன். அதாவது, நான் இன்று கூறிய எனது கூற்றுகளின் மீது உங்களுக்கு உறுதியான நம்பிக்கை ஏற்பட்டு விடட்டுமாக! மேலும் உங்கள் மீது இஸ்லாத்தின் அழகும், அதன் அழகிய போதனைகளும் வெளிப்பட்டு விடட்டுமாக! உண்மையில் இதுவே இஸ்லாம் ஆகும். இது அனைத்து மனிதகுலத்திற்கான ஒளிக்கதிராகும். மேலும், அதன்படி அஹ்மதிய்யா ஜமாஅத் செயல்பட்டு கொண்டிருக்கின்றது.

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இன்றைய உலகத்திற்கு இந்த விஷயத்திற்கான கடும் தேவை இருக்கின்றது. அதாவது, எல்லா மார்க்கங்களையும் ஏற்றுக் கொண்டவர்களும்,எவர்களுக்கு மார்க்கத்தின் மீதான நம்பிக்கை இல்லையோ அவர்களும் ஒன்றுகூட வேண்டும். அனைத்து சமுதாயங்கள் மற்றும் இனங்களின் நோக்கத்திற்காக இந்த உலகை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக ஒன்றுதிரள்வது மிகவும் அவசியமாகும். எங்கெல்லாம் அநீதியிழைக்கப்படுகின்றதோ அதனை அமைதியை விரும்பக் கூடிய மக்கள் அனைவரும் அதனை வலிமையுடன் தடுத்து நிறுத்துவதற்காக கண்டிப்பாக ஒன்றுதிரண்டே ஆக வேண்டும். ஒவ்வொருவரும் தமது உள்ளங்களிலிருந்து பகைமை, காழ்ப்புணர்ச்சி மற்றும் வெறுப்பை முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இல்லையென்றால் இந்த பகைமைகள் பிறீட்டு எழுந்து விடும். மேலும், உலகின் அழிவிற்கு காரணமாகி விடும். உலகப் போருக்கான அடையாளங்கள் தொடர்ந்து வானத்தில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், இந்தப் போரின் பேரழிவிற்குரிய விளைவுகளிலிருந்து தப்பிப்பதற்காக ஒரு வழிமுறை தான் இருக்கின்றது. அதாவது, தனது படைப்பினத்திற்காக ரஹ்மானாக இருக்கின்ற அந்த ஏக இறைவனிடம் துஆ செய்யப்பட வேண்டும். உலகம் அந்த இறைவனின் பக்கம் குனிந்து விட வேண்டும் என்பது எனது துஆ ஆகும்.

இறுதியில், நீங்கள் அனைவரும் நேரத்தை ஒதுக்கி எங்களுடைய இந்த மகிழ்ச்சியில் பங்கெடுத்ததற்காக ஒருமுறை மீண்டும் நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அல்லாஹ் உங்கள் மீது அருள் செய்வானாக! நன்றி!

ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடைய இந்த சொற்பொழிவு ஒரு மணி பத்து நிமிடம் வரை தொடந்து நிகழ்ந்து கொண்டிருந்தது. ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் சொற்பொழிவு நிறைவடைந்த உடன் அனைத்து விருந்தினர்களும் எழுந்து நின்று விட்டார்கள். மேலும் அதிக நேரம் வரை கைத்தட்டிக் கொண்டிருந்தார்கள்.

அதன் பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் துஆ செய்து வைத்தார்கள். துஆவிற்கு பிறகு அனைத்து விருந்தினர்களுக்கும் விருந்து பரிமாறப்பட்டது. உணவுக்குப் பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவுகூர்ந்து விருந்தினர்களை சந்தித்தார்கள். விருந்தினர்கள் ஒவ்வொருவராக ஹுஸுர் அன்வர் அவர்களிடம் வந்தார்கள் உரையாடினார்கள் ; மேலும் விண்ணப்பித்து புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு நபரும் ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை சந்திப்பதற்காக மிகவும் துடிப்புடன் இருந்தார்கள்.

இதன் பிறகு ஹுஸுர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 10.20 நிமிடத்தில் தமது அலுவலகத்திற்கு சென்று விட்டார்கள்.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை, ஜூலை 19,2013)

**(தொடரும்....)**

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

**Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad**